www.padippakam.com

# புலம் பெயர்ந்தோர் கதைகள்




□ மகாஜன வெளியீடு □

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# புலம் பெயர்ந்தோர் கதைகள்

ஒலி – 1

1994

புரட்டாதி

மகாஜன வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com

உள்ளே . . .

- நெஞ்சில் உரமுமின்றி. .
  — அனலையூர். அன்ரன்
- பாதை வழுவிய பாதங்கள்
  — பசுபதி
- பாபர் சலூான்
  — மாவை. நித்தியானந்தன்
- எனது நிறம் கறுப்பு
  — புவனன்
- ஒரு இளைய மூச்சு
  — தமயந்தி
- ஆச்சாரச்சுமை
  — வி. த. மயில்மேலழகன்
- தங்கமடி தங்கம்
  — ஏ. ஜே. ஞானேந்திரன்
- வெள்ளை இருட்டில் ஒரு கருப்பு வெளிச்சம்
  — சக்திப்புயல்
- வெள்ளைப் புறா ஒன்று . . .
  — ஜயசுதன்
- ஏழரை
  — க. ஆதவன்

தொகுப்பு,வடிவமைப்பு : புவனன்
அட்டைப் படம் : Emile Bayard
நன்றி : Musées de la Ville de Paris

படிப்பகம்

www.padippakam.com

புலம் பெயர்ந்தோர் கதைகள் ஏராளம். ஆனுல் அவற்றைச்சொல்லுவதற்குத்தான் பலருக்குக் கூச்சங் கள். பிறந்தநாள், திருமணம் இன்ன பிறகொண்டாட் டங்களின் போது, வீடியோக்களில் பதிவாக்கப்படும் எங்கள் முகங்கள் போலியானவை. பொய்யானவை. நெருக்கடி மிக்க அகதிக்கோலத்தை மறைத்து, 'வாழ் வது'போல நடிக்கமுயற்சிக்கிறோம். அதில் ஒருவித திருப்தியும்.

ஒருவிதத்தில், அதுவும் குறைகாணமுடியாததுதான். ஆனுலும், போதிய நெறிப்படுத்துவோரற்று, சிதறிச் சின்னுபின்னமாகிக்கொண்டிருக்கும் எங்கள் புலம்பெயர் உண்மை வாழ்வு பதிவாக்கப்படல்வேண்டும். இது ஈழத்தமிழ்ச் சமூகம் பற்றிய ஆய்வுகளுக்கும், வளப்ப டுத்தல்களுக்கும் மிகவும் அவசியமானது.

1994 ம் ஆண்டு, எமது ஸ்தாபகர். பாவலர். தெ. அ. துரையப்பாபிள்ளை நினைவாக நாம் நடாத்திய போட் டிக்கு வந்திருந்த ஆக்கங்கள் சில, உற்சாகந்தரத்தக் கனவாய் அமைந்தன. ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி, அவற்றைத்தொகுப்பாக வெளிக்கொணர எடுத்த முயற் சியே இச்சிறு தொகுப்பு.



படிப்பகம்

www.padippakam.com

இத் தொகுப்பில், போட்டிக்கு வந்த கதைகளோடு, வேறு சில இலக்கிய நண்பர்களையும் அணுகி, அவர் களது ஆக்கங்களையும் சேர்த்திருக்கிறோம். மேலும், தொகுப்புச் சிறப்பிற்காக, கனடாவிலிருந்து வெளிவரும் "நான்காவது பரிமாணம்" இதழிலிருந்து "வெள்ளைப் புறா ஒன்று....." என்ற ஜயசுதனின் கதையும், அவுஸ் திரேலியாவிலிருந்து வெளிவரும் "மரபு" இதழிலிருந்து "பாபர் சலூான்" என்ற மாவை. நித்தியானந்தனின் கதையும் சேர்க்கப்பட்டிருக்கிறன. சஞ்சிகைகளுக்கு எமது நன்றிகள்.

தொடர்ந்தும், இதுபோன்ற தொகுப்புக்களை, எழுத் தாள -வாசக -விமர்சகர்களது பூரண ஒத்துழைப்போடு வெளிக்கொணர விரும்புகின்றோம். வாசக, விமர்சகர் களது அபிப்பிராயங்களைப்பொறுத்து எமது முயற்சி ஒரு புலம்பெயர் சிறுகதைச்சஞ்சிகையாகவும் தோற்றம் பெறலாம். எல்லாமே உங்கள் கைகளில்தான்.

**- மகாஜனு பழையமாணவர் சங்கம் -**
**பாரிஸ்**

அபிப்பிராயங்கள்,
மற்றும் தொடர்புகளுக்கு,
M. Sinnathurai,
B. P. 701 - 09
75425 Paris Cedex



படிப்பகம்

www.padippakam.com

# நெஞ்சில் உரமுமின்றி.....

பாரிஸிலிருந்து

- அனலையூர். அன்ரன் -

"அம்மோய் இஞ்ச அண்ணையைப் பாரெணை தேங்கா எண்ணை விக்கிற விலையில மீசைக்கு எண்ணை தடவுறேர்" தங்கச்சி பெரிசாய் கத்துறாள். அம்மா ஒண்டும் பறையாமச் சிரிக்கிறா. பிறகு திடீரெண்டு கண் கலங்கிறா. தம்பியின்ர நினைப்பு வந்திற்றுப் போல. இவள் தங்கச்சி இப்பிடித்தான். என்னோட தனகாட்டி அவளுக்கு சாப்பிட்டது செமியாது. இவளுக்கு என்ன தெரியும் என்ர மீசையைப் பற்றி?
சின்னனில என்னட்டை ஆராவது 'உனக்கு ஐயாவில விருப்பமா? அம்மாவில விருப்பமா?' எண்டு கேட்டால் 'டக்' கெண்டு ஐயாவில தான் விருப்பம் எண்டுவன். ஏனெண்டா அம்மாவுக்கு மீசை இல்லையே. ஐயா மீசையை முறுக்கிக் கொண்டு எங்கிட தோட்டத்துக்க நிண்டு நிலம் கொத்தேக்க எனக்கும் அப்பிடி செய்யோணுமெண்டு சரியான ஆசையாய்க் கிடக்கும். ஆனால் எனக்கு அப்ப மீசையே முளைக்கயில்ல.

நான் பள்ளியில படிக்கேக்க எங்கிட வகுப்பிலேயே எனக்குத்தான் முன்னம் முன்னம் மீசை அரும்பினது. சில பொடியளுக்கு என்னில சரியான எரிச்சல். இவள் தங்கச்சிக்கு என்ன தெரியும்? நான் அப்பவே மீசைக்கு தேங்கா எண்ணை பூசுறனான். பாரதியார் மாதிரி பெரிய மீசை வளர்த்து அவரைப் போலவே ஒருத்தருக்கும் பயப்பிடாமல்



படிப்பகம்

www.padippakam.com

நெஞ்சை நிமிர்த்தி நடக்கோணும் எண்டு நினைச்சுக்கொண்டிருந்த னான்.

ஆனால் இந்தியன்"ஆமி" வீடு வீடா பூந்து பொடியள் பொட்டையளை ளப் பிடிக்கிறாங்கள் எண்டோடண மீசை என்னை பெரிய இளந்தாரி யாக் காட்டுதெண்டும் , இளந்தாரிப் பெடியளக் கட்டாயம் அவங்கள் பிடிப்பாங்கள் எண்டும் என்னை மீசையை வழிக்கச் சொல்லி அம்மா கெஞ்சினா. அவவைப் பாக்க பாவமாகக் கிடந்தது. எனக்கும் சாடை யான பயமாக் கிடந்தது. மீசையை வழிச்சுப் போட்டன். மீசை வழிச்ச கவலையில அண்டைக்கு முழுக்க நான் சாப்பிடயில்ல. அம்மா அந்தக் கிழமை முழுக்கச் சாப்பிடயில்ல. ஏனெண்டா அண்டைக்குத்தான் தம்பி இயக்கத்துக்குப் போனவன்.

இந்தியா "ஆமி" யும் போய்ற்றாங்கள். இப்ப எங்கிட பொடியளின்ர அரசாங்கம் தானே , ஆருக்குப் பயம்? பெரிசாய் பாரதி மாதிரி மீசை வளர்ப்பமெண்டு எண்ணை எடுத்துப் பூசினா, இவள் தங்கச்சி "செல்" விழுந்த மாதிரியெல்லோ கத்துறாள். மீசை எப்பிடியும் இன்னும் ஒரு மாசத்தில பாரதியாற்ற "லெவலு"க்கு வருமெண்டு தான் நினைக்கிறன்.

ஐயா வாறேர். சாடையான வெறி போல. குசினிக்க போய் அம்மா வோட ஏதோ கதைக்கிறேர். எனக்கும் கேக்குது. "இஞ்சேரணை இவன் நடனம் மாஸ்ரற்ற பொடியன் பிரான்சில இருந்து கொழும்பில வந்து நிக்கிறானாம். வாற மாசம் திரும்பவும் போறானாம். அவன் "ஏச்சென்சி" வேலை தான் செய்யிறானாம். அதுதான் இவன் ராசனை அவனோட சேத்து வெளிநாட்டுக்கு அனுப்பிவிடுவமெண்டு யோசிக்கிறன்.

"அது சரியப்பா, காசுக்கு என்ன செய்யிறது "?

"அதுக்கும் ஒரு ஒழுங்கு செய்திருக்கிறன். தோட்டக்காணியை நடனம் மாஸ்ற்றருக்கு எழுதிப் போட்டுத்தான் இவனை அனுப்பப் போறன்."

அதுக்கு அங்கால எனக்கு ஒண்டும் கேக்கேல்ல. 'அடிசக்கை அம்மன் கோயில் புக்கை' என்னை வெளிநாட்டுக்கு அனுப்பப் போயினம். அங்க எல்லாம் சும்மா கழுவுற துடைக்கிற வேலைதானாம். லிங்கம் கடிதம் போட்டிருந்தவன். ஆனால் அந்த வேலையளே தனக்கு சரியான கஸ்டமாய் இருக்கெண்டு எழுதியிருந்தவன் அவன். ஆள் இஞ்சேயே சரியான ஒரு பஞ்சி பிடிச்சவன். இந்த வெய்யிலுக்குள்ள நிண்டு தோட்டம் கொத்துற எனக்கு இந்த கழுவிற துடைக்கிற வேலையெல் லாம் வலு சிம்பிள். இனி என்னப் பிடிக்கேலாது.

ஐயா வந்து என்ரை தலையை தடவிவிடுறேர். அவற்ற கண் சாடையாய் சிவந்திருக்கு. நான் நினைச்சன் வெறியில தான் ஐயாவுக்கு கண் சிவந்திருக்கெண்டு. ஆனால் ஐயாவின்ர கண்ணிலயிருந்து கண்ணீர் வருது.



படிப்பகம்

www.padippakam.com

"தம்பி இராசன் நீ தான் இந்த குடும்பத்துக்கு மூத்த பிள்ளை. கடன உடனப்பட்டு உன்னை வெளியில அனுப்பப் போறன். சீவியத்துக் கெண்டு இருக்கிற தோட்டக்காணியை அறுதியாய் எழுதிப்போட்டுத்தான் அலுவல் பாக்கிறன். உன்ர தங்கச்சி கரையேறுறதோ, எங்கிட குடும்பம் இந்த ஊரில தலைநிமிர்ந்து நடக்கிறதோ உன்ர கையில தான் இருக்கு. உன்ர தம்பி நாட்டுக்காகப் போய் செத்துப் போனான். இப்ப இந்தக் குடும்பமே உன்னை நம்பித்தான் இருக்கு . யோசிச்சு நடந்துகொள்."

எனக்கும் சாடையா அழுகை வருது. ஆனால் நான் ஒண்டும் பறையேல்ல. பிறகும் ஐயா தான் சொன்னேர்.

"வெள்ளிக்கிழமை கொழும்புக்கு வெளிக்கிட வேணும். முதலில இந்த தலைமயிரை வெட்டி மீசையை வழிச்சு ஒழுங்காய் இரு. தாண்டிக்குள "செக்" கிங்கில சரியான கெடுபிடியாம். படிக்கிற பொடியன் மாதிரிப் போனால் தான் அவங்கள் அவ்வளவாய் கிளறமாட்டாங்கள்." சொல்லிப் போட்டு ஐயா வெளியில போறேர். போச்சு.. போச்சு.. ஐயா மீசையை வழிக்கச் சொல்லிப் போட்டு போறேர். இப்ப என்ன செய்யிறது ம்..ம்... அது சரி வவுனியா தாண்டிறதெண்டா மீசையை வழிச்சுப் போட்டுத் தான் போகவேணும்.

ஒரு மாதிரி கொழும்பு வந்து சேந்திற்றம். வரேக்க வழியில பட்ட பாடு... சொல்லி வேலையில்ல.. ஆனால் சனங்களும் துணிஞ்சிற்றுது கள். முந்தி நயினாதீவுக்கு தேருக்கு போகேக்க ஒரு எப்பன் துாரம் "லோஞ்சி" யில போறதுக்கு ஆயிரம் தரம் அம்மாளுக்கு நேர்த்தி வைச் சுத்தான் "லோஞ்சி"யில ஏறுவினம். இப்ப என்னடாண்டா கிளாலிக் கடலுக்குள்ள அவன் அங்காலயிருந்து "ஷெல்" அடிக்கேக்க கூடி பயப்பிடாம வருகுதுகள். அதுசரி.. பயப்பிட்டா பட்டினி கிடந்தெல்லோ சாகவேணும்.

ஏதோ பெரிய கொழும்பெண்டாங்கள் இஞ்ச ஒண்டையும் காணேல்ல. எங்கிட அம்மாவுக்கு கொஞ்சம் துாரத்து சொந்தமான ஆக்கள் வீட்டிலதான் தங்கியிருக்கிறம். அவையிட பொடியன் பெரிய கரைச்சல். அவன் பிறந்து வளந்து யாழ்ப்பாண பக்கமே வரேல்லயாம். "அண்ணே ரொக்கட் லோஞ்சர் எப்பிடியிருக்கும்? குமரப்பா பைஃவ்தவுச ண்ட் எப்பிடியிருக்கும்?" எண்டு எப்பப்பார்த்தாலும் கேள்விகள் கேட்டுக் கொண்டே இருக்கிறான். அங்கேயும் ரோட்டில திரியேக்க இஞ்சமாதிரி அடையாளட்டை கொண்டு திரியோணுமா எண்டு கேட்டான். இரவு நேரங்களில வெளியில திரியலாமோ எண்டும் கேக்கிறான். "அங்க நாங்கள் ஆருக்குப் பயம்? எங்கிட ஊர் எங்கிட ரோட்டு நாங்கள் எங்கே யும் எப்பயும் எப்பிடியும் போய் வரலாம்" எண்டு சொன்னன். அப்ப கொழும்பு எங்கிட நாடு இல்லையோ எண்டு எதிர்க்கேள்வி கேக்கிறான். பிறகு "இல்லைத்தான் போலக் கிடக்கு" எண்டு மெதுவாச் சொல்லு றான். பிறகு கேட்டான் "அண்ணே பதுங்கு குழி எப்பிடி இருக்கும்"?



படிப்பகம்

www.padippakam.com

"உங்கிட வீடுமாதிரி இருக்கும்" எண்டடன். வேற என்ன வெளியில திரிய ஏலாது. வீட்டை விட்டு வெளியில தலைகாட்டினாப் பிரச்சினை.

யாழ்ப்பாணத்தில தமிழர் குழிக்குள்ள பதுங்கிறம். கொழும்புத் தமிழர் வீட்டுக்க பதுங்கிக் கொண்டிருக்கினம்.

* * *

சிங்கப்பூர். . . .
எனக்குச் சரியான சந்தோசமாய் கிடக்கு. ஒரு மாதிரி இலங்கையில இருந்து தப்பி வந்திற்றன். எனக்கு எல்லாத்தையும் விட சந்தோசம், இனி மீசை வளர்க்கலாம். பாரதியார் மாதிரியே வளர்க்கலாம். பாரதி யார் மாதிரியே மீசையை முறுக்கிக் கொண்டு நெஞ்சு நிமிர்த்தி நடக்க லாம். ஆருக்குப் பயம் ?
சிங்கப்பூர் நல்ல வடிவான நாடு. எல்லாம் வலு நீற் . பின்னேர நேரங்களில வெளிக்கிட்டு சும்மா நடந்து திரிவன். "செந்தோசா" எண்டொரு இடம் இருக்கு, பார்க்க பதினாறு கண் வேணும். ஆனால் தமிழ்ச்சனம் கூடுதலாய் இருக்கிற "சிரங்கூன்" ஏரியா மட்டும் அவ்வளவு முன்னேற்றம் இல்லாமல் சாடையான குப்பையா கிடக்கு. அது ஏனெ ண்டு தெரியேல்ல.
இஞ்ச வந்து ஒரு மாசமாகுது. மூண்டு நாள்தான் சிங்கப்பூரில நிக்கவேண்டி வருமெண்டு ஏஜென்சி கொழும்பிலயிருந்து வரேக்க சொல்லிக் கூட்டிக்கொண்டு வந்தவர். நாங்கள் எல்லாமா நாலு பொடியள் வந்தனாங்கள். அதில ஒரு பொடியன் "ஏன் இன்னும் எங்களை பிரான்சுக்கு அனுப்பயில்ல"? எண்டு கொஞ்சம் கோவிச்சுக் கேட்டுப் போட்டான். அவன் கேட்டதும் சரிதான். காசு வேண்டேக்க மட்டும் சிரிச்சு சிரிச்சு வேண்டிப் போட்டு நடுவழியில கொணந்து எங்கள விட்டுப் போட்டு ஒரு அக்கறையில்லாம திரியிறோர்.
அண்டைக்கு இரவு "ஏஜென்சி" தண்ணியைப் போட்டுட்டு வந்து அந்தப் பொடியனுக்கு அடிச்சுப் போட்டேர். எனக்கு "ஏஜென்சி" யில சரியான ஆத்திரம் வந்தது. கொணந்து ஊர் பேர் தெரியாத இடத்தில விட்டுப்போட்டு சண்டித்தனம் காட்டுறோர். ம். . . யாழ்ப்பாணத்தில எண்டா இவர் இப்பிடி சொறிச் சேட்டைகள் விட ஏலுமே?
காலம்பிற பத்து மணியிருக்கும். ஏஜென்சி என்ன தனியக் கூட்டிக் கொண்டு போனேர். "தம்பி உமக்கு நாளைக்குப் பயணம். என்ர ஊர்ப் பொடியன் எண்டபடியா உம்மை முதல்ல அனுப்புறன். மற்றப்பொடி யளுக்கு சொல்லிப் போடாதேயும் , பிறகு குழம்புவாங்கள்" எண்டு சொன்னவர் ஒரு நீல நிற புத்தகத்தை எடுத்து எனக்கு விரிச்சுக் காட்டினார். "இது தான் நீர் போகப் போற புத்தகம். இந்தப் புத்தகத் தின்ர பேர், வயது விபரங்களை இரவோட இரவா இண்டைக்கே பாடமாக்கிப் போடும். இதில இருக்கிறது போல கையெழுத்து வைக்க வும் பழகும். மற்றது மீசையை வழிச்சு "கிளின்சேவ்" எடும் என்ன? அப்ப தான் இந்த புத்தகத்திலுள்ள படத்துக்கு உம்மிட முகம் பொருத்தமாய் இருக்கும்".



படிப்பகம்

www.padippakam.com

எனக்கெண்டால் மீசையை வழிக்க துப்பரவாய் விருப்பம் இல்லை. அவர் காட்டின "பாஸ்போர்ட்" படத்துக்கு மீசை வழிச்சாத்தான் நான் "சேப்"பாய் இருப்பன். என்ன செய்யிறது எப்பிடியாவது பிரான்ஸ் போகத்தானே வேணும்.

சரி... இதுதான் நான் மீசை வழிக்கப் போற கடைசித்தரம். இனிமேல்பட்டு எக்காரணம் கொண்டும் மீசை வழிக்கிறேல்ல. பிரான் சுக்கு போன கையோட பெரிய மீசை வளர்க்கோணும் பாரதியார் மாதிரியே வளர்க்கோணும்.

* * *

பிரான்சுக்கு வந்தும் ஆறுமாசம் முடிஞ்சுது. ஏதோ பிரான்சில "பாலும், தேனும்" ஓடுற மாதிரித்தான் ஊரில கேள்விப்பட்டனான். இஞ்ச வந்து பார்க்கத்தான் எங்கிட பொடியள் படுற கஸ்டம் தெரியுது. லிங்கம் நல்ல பொடியன். ஊரில பழகின சிநேகிதத்தை மறக்காமல் கனக்க உதவிகள் செய்யிறான். அவன்ர அறையில தான் இருக்கிறன். எல்லாமா அஞ்சு பொடியள் இருக்கிறம். வேலை வெட்டி ஒண்டும் கிடைக்கயில்ல. தான் வேலை செய்யிற "றெஸ்ரோறண்" டில ஒரு வேலை இருக்கெண்டு காலம்பிற லிங்கம் என்னை கூட்டிக் கொண்டு போனவன். என்னக் காட்டிக் காட்டி முதலாளியோட ஏதோ கதைச்ச வன். பிறகு வந்து "நீ வீட்ட போ எல்லாத்துக்கும் பின்னேரம் வாறன்" எண்டான். அம்மாளாச்சி இந்த வேலை மட்டு கிடைச்சிற்றெண்டால் என்ர குடும்பத்துக்கு ஒரு வழி பிறக்கும். ஈடு வைச்ச காணிக்கு வட்டி ஏறிக்கொண்டே போகுதெண்டு ஐயா கடிதம் போட்டிருக்கிறேர்.

இந்த ஆறுமாசமாய் ரூமுக்குள்ள இருந்து நான் செய்யிற ஒரே வேலை என்ர மீசையை கண்ணும் கருத்துமா வளக்கிறதுதான். ஊரில எண்ணை பூசி வளத்தனான். இப்ப "கிறீம்" போட்டு வளக்கிறன். கொழும்பில நிக்கேக்க அடிக்கடி வழிச்சதால மீசை கிசுகிசு எண்டு வளருது. எப்பி டியும் இன்னும் ரெண்டு மாசத்தில பாரதியாற்ற "லெவலு" க்கு வந்திரும். இஞ்ச ஆருக்குப் பயம், இலங்கை "ஆமி"க்கு பயமா? இந்தியன் "ஆமி"க் குப் பயமா? ஒருத்தருக்கும் பயமில்லை.

கதவு தட்டிக் கேக்குது. லிங்கம் தான் வாறான். "மச்சான் ராசன் நான் "ரெஸ்ரோரண்"டில கதைச்சனான். உன்னை நாளைக்கு வேலைக்கு வரட்டாம். நல்ல சம்பளம் தருவாங்கள் மச்சான். மற்றது மச்சான் நாளைக்கு வேலைக்கு வரேக்க உந்த மீசையை வழிச்சுப் போட்டு வா. இங்க மச்சான் சில "பத்திறோன்" மாருக்கு மீசை வச்சி ருந்தா பிடிக்காது." எண்டு சொல்லிப் போட்டு "இந்தா மச்சான் உனக் கொரு கடிதம் வந்திருக்கு" எண்டு ஒரு கடிதத்தை என்னட்ட தந்தான்.



படிப்பகம்

www.padippakam.com

எனக்கு அழுகைதான் வருகுது. மீசையை வழிச்சால் தான் வேலைக் குப் போகலாம் எண்டு சொல்லுறான். அப்ப நான் இனி பாரதியார் மாதிரி மீசை வைச்சிருக்க ஏலாதா? மீசையை முறுக்கிக் கொண்டு பாரதியார் மாதிரி நெஞ்சை நிமித்திக் கொண்டு கையை விசுக்கி விசுக்கி நடக்க ஏலாதா ?

கையிலிருந்த கடிதத்தை உடைச்சன். ஐயா தான் எழுதியிருக்கிறேர். கடிதத்தோட ஒரு "நோட்டிசும்" இருக்கு. என்ர தம்பிக்கு முதலாம் ஆண்டு வீர அஞ்சலி செலுத்தி எங்கிட ஊர்மக்கள் "நோட்டிஸ்" அடிச் சிருக்கினம். தம்பியின்ர படம் பெரிசாய் போட்டிருக்கு . படத்தில தம்பி சிரிச்சுக் கொண்டிருக்கிறான். அவனுக்குப் பெரிய மீசை... முறுக்கு மீசை.. சரியாப் பாரதியாற்ற மீசை மாதிரி.

*(தமிழாலயம் புத்தகாலயம், 1994ல் நடாத்திய சிறுகதைப்போட்டியில் 2 ம் இடத்தைப்பெற்றுக்கொண்ட கதை. )*



படிப்பகம்

www.padippakam.com

# பாதை வழுவிய பாதங்கள்

ஜேர்மனியிலிருந்து

- பசுபதி -

"அம்மா.. அம்மா.. என்ர அம்மா !"

கூட்டுப்புழுப்போல சுருண்டு கிடந்த ஜீவாவின் அலறல் சத்தம் அந்த ஆஸ்பத்திரியையே அலறவைத்தது. கிட்டப் போய்ப் பார்ப்ப தற்கு நோயின் பரவச்சக்தி சட்டம் என்னையும் தடுத்து நிறுத்தியது.

அதோ வேகமாக வருகிறாரே, டாக்டர் எனக்குக் கிட்டத்தான் வருகிறார். கிட்டப் போகின்றேன். அவனுக்கு என்ன நடந்ததென்று தெரியாது துடிதுடிக்கின்றேன். பாவம் இரண்டு நாட்களாக தொண் டைக்குள் பெரிய அளவு நோவும் காச்சலும் எண்டுதான் படுத்தபடுக் கையாய் கிடந்தான். ஆனால் வரவர நிலமை மோசமானதால் "அம்பு லன்ஸ்" வரவழைத்து ஆசுப்பத்திரிக்குக் கொண்டுவர நேர்ந்தது.

டாக்டர் என்னை ஏறஇறங்க ஒருமாதிரிப் பார்க்கிறாரே என்ன இழவோ! என எண்ணி முடிப்பதற்குள் , நீங்கள் அந்த ஜீவாவுக்குத் தெரிந்தவரா, என்று ஏதோ இழந்ததையொத்த தொனியில் கேட்டார். என் நண்பனாச்சே, அவனுக்கு என்ன நடந்தது என்பதை அறியும் ஆவலோடு , ஆம் அவன் என் நண்பன்தான் என்றேன். நீங்களும் அவருடன் ஒன்றாகவா வாழ்கிறீர்கள் ?



படிப்பகம்

www.padippakam.com

டாக்டரின் அடுத்த கேள்வி என்னை மலைக்கச் செய்கிறது. வருத்தம் என்ன என்று கேட்கப் போன என்னை வக்கீல் போல கேள்வி கேட்கிறாரே !
ஏன் அப்பிடிக் கேட்கிறீர்கள்.
உம்மையும் பரிசோதிக்க வேண்டும். அது மட்டுமல்ல நீங்கள் இருக்கும் அகதிமுகாம் முழுவதும் உடனடியாக சுகாதாரப் பரிசோத னைக்குட்படுத்தப்படவேண்டும்.

ஏன் இவ்வளவு கட்டளையிடுகிறீர்கள் , என்று கேட்கும் நேரம், ஜீவாவுக்கு ஏதோ பயங்கரமான நோயோ என்ற எண்ணமும் என் துயரநிலைக்குள் தலைநீட்டியிருந்தது.

இதோ பாரும் உமது நண்பருக்கு எயிட்ஸ். ஒழுக்கமின்றி நடந்த தால் இப்ப பாரும் எவ்வளவு பேருக்கு அபாயம், கஷ்டம் என்று.

அட கடவுளே இதென்ன புதுக்கஷ்டம் . என் உடம்பை பயம் குலுக்கி எடுத்தது. ஐயோ உயிருக்குப் பயந்து, ஓடோடி வந்து இப்படி அநியாயமாகவா உயிர் போக வேண்டும். ஜீவா, அவன் உயிர் போகப் போகிறதா? ஐயோ, இத்தனை காலம் இனிமையாக வாழப்பழகிக் கொண்ட நமது விதி இப்படியா !

என் கண்களில் பொலு பொலுவென என்னை அறியாமலே அடை உடைத்தது.

டாக்டர் கண்டித்துப் பேசும்போது கூட எனது நெஞ்சம் உன்னை கெட்டவனாக சித்தரித்துப் பார்க்கத் துணிந்ததில்லை. இப்பவும் தான் எப்பவும் தான். ஆனால் உன்நிலை!

இன்னும் சிறிது நாள்தானாம். டாக்டர் கூறிய கடைசி வார்த்தை. அதைக் கேட்டதும் அடிவயிற்றிலிருந்து அனல் மிகுந்த ஏக்கப் பெருமூச்சு கொட்டிவிட்டு நின்றது.

அவன் நிலையில் உருகி இறுகிப் பரிதாபப்பட்டு டாக்டரிடம் இறைஞ்சிக் கேட்டேன், அவனை ஒருமுறை பார்க்கலாமா ?

இல்லை இல்லை இனிமேல் அவரை யாரும் பார்க்க முடியாது. பார்க்கவும் கூடாது.

மனிதனாகப் பிறந்த எவனும் ஓர்வகையில் தப்புப்பண்ணாமலில்லை. ஆனால் சில சமயங்களில் அதுவே அவனுக்கு சவக்குழி தோண்டி விடுகிறது. மோகத்தைக் கொன்றுவிடத் தெரியாத அவன், மாத அகதிப் பணத்தில் அற்ப சுகத்திற்காக யார்யாரையோவெல்லாம் நாடிச்சென் றான். நண்பனாக இருந்தும் சிலசமயங்களில் விவாதித்ததுண்டு.



படிப்பகம்

www.padippakam.com

படைத்ததெல்லாம் இறைவன் என்ற நேசிப்பைவிட , என் பருவ உணர்ச்சிகளுக்குப் பதில் என்ன என்பான். வாலிபம் இருக்கும் வரை வசந்த விழாக்களை நடத்தவேண்டியதுதான், மனிதப்பிறவியின் பயன் என்பான். நான் என்ன புத்தி கூறினாலும் வெள்ளைக்கார நாட்டில் விரிந்துகிடக்கின்ற மனிதசுதந்திரத்தை, அனுபவிக்கப் பழகவேண்டும் என்பான். துன்பத்தைக் கட்டிச்சுமக்க துணிந்தவனாச்சே! எது சொல்லி ஏறப்போகிறது.

நான்கு பெண்பிள்ளைகளுக்கு இவன் தலைமகன். வீட்டுப்பொறுப்பு கண்டிப்பாக உண்டு. ஆனால் ஏதோ அவன் தலைவிதி இப்படி அமைந்துவிட்டது. அழகிலே நவீன அருச்சுனன். ஒரேஒரு ஆண் பிள்ளை என்ற செல்லவளர்ப்பில் அவன் தேகம் தேக்குமரத்தில் செய்த வடிவம். வஞ்சியரின் கண்பார்வைக்கு அவன் "விருந்தாகி"த்தான் ஆகவேண்டும். அப்பேற்பட்ட உடம்பு இன்று தவியாய் தவிக்கிறதே. அவன் நிலையை நினைக்க, நினைக்க என்குருதி அலகுகள் எல்லாம் புடைப்பெடுக்கிறதே. அவன் உயிர் பிரியப் போகிறதாமே இந்தக் கேள்வியை எனக்குள் கேட்கக் கேட்க எழும் கொடூரஅனலை என்இத யம் எவ்வளவு நேரம் தான் தாக்குப்பிடிக்கப் போகிறதோ! என்பதுதான் எனக்குள் எழும் கேள்வி.

அந்த ஆசுப்பத்திரியில் வேலைசெய்யும் மாதர்குல மாணிக்கங்கள் கூட ஏக்கத்தில் நிற்கும் என்மீது ஒருவித அசட்டுத்தனமான பார்வை ! என்றோ ஓர் நாள் நான் ஜேர்மன்காரனோடு சண்டை போட்டேன் - உங்கள் கலாச்சாரத்தின் மூலம்தான் இந்தநோய் பரவுகிறது என்று. அந்த ஜேர்மன்காரன் சொன்னான் முதன்முதலில் இந்தியாவிலிருந்து கறுப்பர்கள் மூலம்தான் இந்நோய் தொடங்கிற்று என்று.

அந்த வெள்ளைக்காரன் இதை அறிந்தால், சீ.. என்ன மானக் கேடு. நாளைக்கு பேப்பரில், நாளைக்கு அடுத்தநாள் இந்தநாட்டுக்கே தெரியவருமே, 'தமிழனுக்கு எயிட்ஸ்' பொத்திப் பொத்திச் சித்திரமாய் வளர்த்த கலாச்சார மகிமை நாளைக்கு கொடிகட்டிப் பறக்கப்போகிறது. வெள்ளைக்காரன் அப்படி நினைக்கிறானோ என்னவோ ! நமக்கு யாரையும் பார்க்கின்றபோது அவன் நினைக்கின்றது மாதிரித் தோன் றுமே. ஐயோ இந்த மனம் படும் அவஸ்தை, சீ . முடிந்தவரை அவ னைக் கொஞ்சம் தடுக்கப் பார்த்திருக்கலாமே! அப்படி தடுத்திருந்தால் இந்த உயிர்போகாமல் தடுத்திருக்கலாமே. சிரித்துச் சிரித்து நீயும் தானே சிலநேரம் பணம் கொடுத்து அனுப்பினாய். இப்ப நீ நல்லவனாய் நடிக்கப்பார்க்கிறாய், நீயும்தான் ஒருவகையில் காரணம். மனச்சாட்சி என்னையும் தீண்டுகிறது. அவன் குடும்பம் அதை அறிந்தால் அப்பப்பா நினைக்கவே குலை நடுங்குகிறது. அட இறைவா மனிதனுக்கு சாவு என்ற ஒன்றை கட்டாயப்படுத்தி வழங்கிவிட்ட பிறகு மனிதன் எப்படியும் அனுபவித்துவிட்டுச் சாகட்டுமன். இடையில் ஏன் இப்படி வதைக்கிறாய் மனம் பேசுவதெல்லாம் நியாயமாகித்தான் விடுமா ? விடமுடியுமா?



படிப்பகம்

www.padippakam.com

என்றாலும் மனக்கூச்சல் தான். வீம்புக்காக , ஆத்திரத்திற்காக எதையும் கூறலாம். ஆனால் நடப்பதெல்லாம் நிச்சயமாக அவன் செயலாகத்தான் இருக்கமுடியும்.

ஏதோ எல்லாவற்றையும் அனுபவித்து மெஞ்ஞான முதிர்ச்சி கண்டது போன்று அமைதி. மீண்டும் டாக்டர் என்னை கூப்பிடும் நிலமை கண்டு வழமையான நினைவுக்கு திரும்புகிறேன்.

உடனடியாக உமது அகதிமுகாமிற்குச் சென்று அங்கே உமது நண்பர்களுக்கு அறிவித்துவிடும் - நாளைக்கு எட்டுமணிக்குள் நாங்களும் பொலிசும் வருவோம் என்று. இப்போ நீர் போகலாம்.

கடவுளே இப்படியொரு வாழ்வா? இதை எப்படிப்போய் அகதிமுகாமில் சொல்வேன்! சொல்லித்தான் ஆகவேண்டும். அதனால் விளையும் விபரீதத்தை நினைத்தால் ரொம்பவும் வேதனைதான். என்ன செய்வது -எங்கே வாழ்கின்றோம் என்பது அல்லவே பிரச்சினை. எப்படி வாழ்கின்றோம் என்பதுதானே கேள்வி. தலைக்கு மேலே போகிட்டுது ஜாண் என்ன முழம் என்ன ?

வறுமையாலும் அரசியல் நெருக்கடியாலும் அல்லற்படும் அவன் பெரிய குடும்பம். அவன் அனுப்புகின்ற அகதிப்பண வருவாயில் வாழ்க்கைச்சக்கரம் சுமாராகப் போய்க்கொண்டிருக்கிறது. இப்போ இப்படியொரு அபாயமா? இனிமேல் அவன் குடும்பம் எவனை நம்பியிருக்கும் ? நான்கு தங்கைகளின் எதிர்காலம் , எல்லாமே சுத்தசூனியமாகிவிட்டதே. ஆசையாய் வளர்த்து , அவன் உயிருக்கு ஆபத்து வரக்கூடாது என்ற மனவாட்டத்தில் அவன் தாய் கரைசேரவேண்டிய பிள்ளைகள் இருக்க கடன்பட்டு அவனை அனுப்பப்பட்டபாடு கொஞ்சமா நஞ்சமா? சோகங்களோடு குடியிருந்து துன்பச்சுமைகளை இறக்கிவைக்க அவன் தாய் பட்டபாட்டினை அவன் அறிந்திருந்தும், இத்தகைய பரிதாப சூழ்நிலையை அடைந்துவிட்டானே. 'ஒழுக்கம் விழுப்பம் தருவதால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' வள்ளுவர் வாக்கு தெய்வவாக்குதான்! அனுபவங்கள் என்றும் புதுமைதான். தாயாலே வந்தவன் நோயாலே போகப்போகிறானோ, ஆண்டவனே அவன் உயிர் பிழைக்கமாட்டானா ? இந்தக் கொடிய நோயை, இந்த ஆள்கொல்லி கிருமியை அழிக்க, இன்னும் ஒரு விஞ்ஞானி வரவில்லையா? என்கைகள் என்னை அறியாமலேயே அகதிமுகாம் வாசலின் பொத்தானை அழுத்தியது. அட வீட்டுக்கு வந்துவிட்டேனா? பாலாவும் மரியதாசனும் ஓடோடி வரான்கள் அதோ!

என்னடாப்பா என்னவாம் ஜீவாவுக்கு!
ஜீவாவுக்கு உயிருக்குயிரான தோழர்கள். விஷயத்தை விஷம் போல கக்கிவிட்டால் விபரீதமாகிவிடும். கொஞ்சம் பொறுத்துச் சொல்வோம்.

என்மனம் படக்படக்கென்று அடிக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

ஒன்றுமில்லையப்பா சும்மா, என்று வாயுக்குள் வார்த்தைகளை உருட்டினேன்.

ஒன்றுமில்லை என்றால் ஏன் உன்முகம் இப்படி வாடிக்கிடக்குது. உண்மையைச் சொல். உன்முகத்தைப் பார்க்க எங்களுக்குப் பயமாக இருக்கிறது.
எப்பவோ சொல்லத்தானே போகின்றோம். இப்போது அகதிமுகாம் முழுப்பேரும் என்னைச்சூழ்ந்து கேள்விகளால் துளைக்கின்றனர். என்றாலும் பட்டென்று சொல்லிவிட மனமில்லை.

நீங்கள் ஒன்றுக்கும் பயப்படாதீர்கள். எயிட்ஸ் மாதிரியான குணகுறி கள் இருக்கென்று டாக்டர் கூறுகிறார்.

என்ன எயிட்ஸா?
எல்லோர் வாய்களும் மௌனத்தைச் சாதித்தது.

இந்த மாதிரியான குணகுறிகள் இருப்பதால் நாளைக்கு இந்த அகதிமுகாம் முழுவதையும் - எல்லோரையும் சுகாதாரப் பரிசோதனை செய்யவேண்டுமாம்.

எல்லோர் முகங்களிலும் பீதி நிறைந்த அனுமானங்கள்.

ஐயோ என்று அலறிய நண்பர்கள், இவனால் நமக்கு இந்த அலங்கோலமா? என்று முகத்திற்கு முன்னே கூச்சமின்றி கூறியவர்கள் ஒழுக்கமாய் இருந்திருந்தால் ஏன் இந்தக்கஷ்டமென்று சமநிலை பாடிய வர்கள் புடைசூழ. ஒரு புதிய ஜனரஞ்சகத்தை என்னால் அனுமானிக்க முடிந்தது. ஒருவனுக்கு துன்பம் வரும்போது தான் ஒரு மனிதனை அறிய முடிகிறது. இங்கே சற்று முன்பு நடந்த சம்பாஷனைகள் தொகுத்து தந்த படிப்பினை. யாரைக் குறைகூறி என்ன லாபம்! அவன் உயிர் பிரியப் போகிறதே ! தாய் தகப்பனை சொந்த பந்தங்களையெல்லாம் துறந்து ஏதோ அந்நிய மண்ணில் பணம் காய்க்கும் மரத்திற்குப் பங்காளியாகப் போகிறோம் என்று துள்ளிவந்தோம் அதனால் ஏற்பட்ட பிரதிபலிப்புகள் கொஞ்சமா ? நஞ்சமா? விரிந்த சுதந்திரம் , கண்ணுக்கினிய காட்சிகள், பணப்புழக்கம், நம் கலாச்சாரக் கோடுகளைத் தாண்டி எதையும் செய்யும் இளைய மனப்பக்குவம் ஏற்படுத்தித் தரப்போகும் பாடங்கள் இதுமட்டுமா? இன்னும் எத்தனையோ !" ஒரு பெருமூச்சால் முற்றுப் புள்ளி.

நித்திரையே வருகுதில்லை. எனக்கு மட்டுமா? அந்த அகதிமுகாம் அன்பர்களனைவருக்கும்தான்.

அகதிமுகாமின் மறுகரையில் இருக்கும் மரங்களில் வாழும் சின்ன க்குருவிகளின் பரிபாஷைகள் விடிந்துவிட்ட பொழுதை நினைவுபடுத்தி யது. திடுக்குற்றேன். இந்தச்சிட்டுகள் எவ்வளவு சந்தோஷமாக வாழ்கின் றன. இவைகளுக்கு பகுத்தறிவு இல்லை என்று சொன்னவன் யார் ?


படிப்பகம்

www.padippakam.com

# பாபர் சலூான்

அவுஸ்திரேலியாவிலிருந்து

- மாவை நித்தியானந்தன் -

வெளிநாட்டுச் சலூானில் முதன்முதலாகத் தலைமயிர் வெட்டிக் கொண்டு வெளியே வந்த சந்திரசேகரம் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

'தலை மயிர் வெட்டுவிக்கிறதிலையே இவ்வளவு சிக்கல்' என அலுத்துக் கொண்டான்.

ஊரிலென்றால் சலூான் அவனுக்கு ஒரு இனிமையான பொழுதுபோக்குச் சாதனம். வீட்டுக்குப் பக்கத்திலேயே கதிரமலையின் சலூான். பத்திரிகைகள் படிக்கும் வாசிகசாலையாகவும் அது தொழிற்பட்டது. பத்திரிகை படித்து முடித்தபின், பத்திரிகையில் வராத உள்ளூர்ப் புதினங்களும் அலசப்படும். தலைமயிர் வெட்டக் காத்திருப்பவர்களுடன் அரசியல் விவகாரங்களை விவாதித்ததன் மூலம் சந்திரசேகரத்தின் அரசியல் அறிவு கணிசமான அளவு வளர்ச்சியடைந்ததும் உண்மை.

வெளிநாட்டுக்குக் குடிபெயர்ந்ததால் அவன் இழந்துபோன சந்தோஷங்களில் கதிரமலையின் சலூானும் முக்கியமான ஒன்று.
வெளிநாட்டுக்கு வந்த பின்னர் சந்திரசேகரம் செய்த விலை ஆராய்ச்சிகளின் போது, தலைமயிர் வெட்ட ஊரைவிட இங்கே நாற்பத்தி மூன்று மடங்கு கூடுதலான செலவு என்று கண்டுபிடித்தான்.



படிப்பகம்

www.padippakam.com

உடனேயே போய் ஒரு கத்திரிக்கோலும், தேடிப்பிடித்து ஒரு பல்லுக் கத்திரிக்கோலும் வாங்கி வந்தான். மனைவி அவன் மீது தலைமயிர் வெட்டிப் பழகலானாள். வெட்டி ஒரு கிழமை முடியும் வரை தலைமயிரைப் படிய வைப்பதென்பதோ பகீரதப் பிரயத்தனமா யிருக்கும். பிறகு படிப்படியாகச் சரியாகிவிடும். இதை விட, இந்தக் கடமையைச் செய்ய மனைவி பெரும் 'நடப்பபடிப்பது ' அவனுக்குத் துப்பரவாகப் பிடிக்கவில்லை. அவளைப் ' பிளீஸ் ' பண்ணித்தான் அவ்வப்போது இதைச் செய்விக்க வேண்டியிருந்தது. இதனால், மயிர் வளர்ந்து கழுத்தையும் காதுகளையும் மூடத் தொடங்கிய பிறகுதான் அதை வெட்டுவது பற்றி யோசிக்கப்படும்.
பத்துப் பதினைந்து இன்ரவியூக்களுக்குப் போயும் ஒன்றும் சரிவராமற் போனபிறகு நடந்த ஆராய்ச்சியின் போது, 'ஒழுங்காகத் தலைமயிர் வெட்டாததாலதான் உனக்கு வேலை தாறாங்களில்லை ' என்று இந்த ஊரில் கடந்த பத்து வருடங்களாக வாழ்ந்து வரும் மணியண்ணர் சொல்லிவிட்டுப் போனார்.
அடுத்த நாள் சனிக்கிழமை. முற்பகல் பதினொரு மணிபோல் பாபர் சலூனைத் தேடிச் சந்திரசேகரம் நடக்கலானான்.
' ஷொப்பிங் சென்ரர்' வட்டாரத்தில் ஐந்து சலூன்களுக்கு மேல் இருந்தன. போகும்போதும் வரும்போதும் கண்ணாடிச் சுவர்களுக்கூடாக மேலோட்டமாகத்தான் அவற்றை இதுவரையில் அவன் நோட்டம் விட்டிருக்கிறான். அவற்றின் தோற்றம் அவனுக்கு ஒருநாளும் பிடித்த தில்லை. சிலவற்றுக்கு 'ஸ்ருடியோ ' என்றும் பெயர் வைத்திருந்தது சிரிப்பாகவும் இருந்தது. ஊரிலே படம் எடுக்கும் இடம்தான் ' ஸ்ருடியோ'.

எதிர்ப்பட்ட முதலாவது சலூனுக்குள் கண்களைக் கூர்மையாகச் செலுத்திக் கொண்டு ஒரு பக்கத்திலிருந்து மற்றப் பக்கத்துக்கு நடந்தான் சந்திரசேகரம். நின்று நோட்டம் விட்டால், மற்றவர்கள் கவனித்து விடுவார்கள் என்றும் பயம். 'ரேடியோக் கடையெண்டாலும் நிண்டு பாக்கலாம் .'

ஊர்ச் சலூனைப் போலல்லாது, இங்கே எல்லாம் பளபளப்பாக - மினுமினுப்பாக 'இருந்தன. 'உள்ளே எல்லோரும் பெண்கள். ஒரு ஆணாவது கண்ணுக்குத் தட்டுப்படவில்லை.

'ஒரு பெட்டையிட்டைப் போய் மயிர் வெட்டக் கேக்கிறதே ? 'அவனால் இதை நினைத்தும் பார்க்க முடியவில்லை. அத்துடன் கறுப்பர்களுக்குத் தலைமயிர் வெட்டச் சம்மதிப்பார்களோ என்ற சந்தேகமும் வந்து வெருட்டியது. கூடப்பிறந்த கூச்சமும் பதட்டமும் சந்திரசேகரத்தை ஆட்கொண்டன.

தான் நின்ற பக்கத்திலிருந்து மற்றப் பக்கத்துக்கு நடந்து உள்ளே நடப்பவற்றை மீண்டும் நோட்டம் விட்டான். இப்படியே ஐந்தாறு



படிப்பகம்

www.padippakam.com

தடவைகள் குறுக்கும் மறுக்குமாக நடந்தும் உள்ளே போக முடிய வில்லை.

எல்லோரும் வெள்ளையர்கள். எல்லோரும் பெண்கள். நின்று கொஞ்ச நேரம் யோசித்தான். பெண்கள் சலூனோ என்று ' போட் ' டைப் பார்த்த போது Ladies and Gents என்று தான் இருந்தது.

இந்த சலூனுக்குள் பிரவேசிப்பதை நினைக்கவே இருதயம் நின்றுவிடும் போலிருந்தது. எதற்கும் அடுத்ததற்குப் போவதென்று தீர்மானித்தான்.

இப்படியே நான்கு சலூன்கள் பரிசோதனை செய்து முடிந்தபோது நேரம் பன்னிரண்டு மணியையும் கடந்திருந்தது. எல்லாம் ஒரே ரகம் தான்.

"பிள்ளையாரே" என்றபடி ஐந்தாவதுக்கு நடந்தான். அவனால் தன் கண்களையே நம்ப முடியவில்லை உள்ளே ஒரு கறுப்பனைக் கண்ட போது. யோசிக்க இடமில்லை. கண்களை மூடிக்கொண்டு நுழைந்தான். கறுப்பனுக்கு அருகே ஒரு ஆசனத்தில் அமர்ந்து மற்றவர்களைப் போல் அவனும் காத்திருந்தான்.

சிகையலங்காரம் செய்து கொண்டிருந்த ஐவரில் ஒருவர் ஆணாக இருந்தது தனக்காகத்தான் என்று சொல்லிக் கொண்டான். "பிள்ளை யார் என்னை ஒருநாளும் கைவிடார்."

ஆனால்_ வரிசைக் கிரமத்தின்படி மற்றக் கறுப்பனுக்கே அந்தப் " பாக்கியம் " கிடைத்த பிறகு , தன்மீதே அவனுக்கு வெறுப்பாயிருந்தது. " அதிட்டம் கெட்டவன். "

வெளியே ஓடிப்போய் விட்டுக் கொஞ்சம் பொறுத்து வரலாமா என்று யோசித்த வேளையில் , ஒருத்தி வந்து அழைத்தாள்.

"Would you like to come in ?"
சந்திரசேகரம் எழுந்து கொலைக் களத்துக்குப் போகிறவன் போல அவள் பின்னால் நடந்தான். அவள் காட்டிய கதிரையில் மென்மையாக அமர்ந்து கொண்டான்.

மனம் 'திக் திக்' கென அடித்தது . முன்பின் தெரியாத ஒரு பெண் தன்னைத் தொட்டு முடி வெட்டப் போகிறாள்... ஆங்கிலத்தில் ஏதாவது கேட்டுவிடுவாளோ என்ற பயம் வேறு. ஆங்கிலம் தெரிந்தாலும், இவர்களின் ஆங்கில உச்சரிப்புகளுக்கும் அவனுக்கும் வெகு தூரம். பத்தில் ஒன்றைக் கூட விளங்கிக் கொள்ள முடிவதில்லை.



படிப்பகம்

www.padippakam.com

எதையோ சொல்லிவிட்டு அவள் சிரித்தாள். விளங்காமலே அவனும் சேர்ந்து சிரித்தான். 'ஒயில்' என்ற சொல் மட்டும் தெளிவாகக் கேட்டதை வைத்து , தனது தலையில் தாராளமாகத் தேய்க்கப்பட்டிருந்த ஈழத்து நல்லெண்ணையைப் பற்றிய கதை என்பதை ஊகிக்க முடிந்தது. மீண்டும் அவள் எதையோ கேட்டதும் , சந்திரசேகரம் விளங்காமலே தலை அசைத்ததும் , அவள் இன்னொரு கதிரையைக் காட்டியதும்,

அவன் அதிலே போய் அமர்ந்து கொண்டதும், முன்னால் இருந்த Wash basin இல் தலையை நீட்டச் சொன்னதும் -எல்லாம் மின்னல் வேகத்தில் , சில கணங்களுக்குள் நடந்து முடிந்து விட்டன.

தலையிலே அவள் தண்ணீரைப் பாய்ச்சிய போது தான் சந்திரசேகரத்துக்கு என்ன நடக்கிறதென்று விளங்கியது.

கதிரமலையின் சலூனில் முடி வெட்டினால் , ஆட்டிறைச்சியும் ரசமும் 'அடித்து' விட்டுத்தான் முழுக்கு நடக்கும்.

அவள் 'ஷாம்பு' தேய்த்து , தண்ணீரால் கழுவி, Drier பிடித்தாள். தன் தலைவிதி தனது கைகளில் இல்லையென நொந்து கொண்டு 'பிள்ளையாரே' என்றான். 'இதுக்கெல்லாம் எவ்வளவு காசு எடுக்கப் போகிறாளோ!'

மீண்டும் கதிரை மாறி, பழைய கதிரைக்குப் போய்ச் சேர்ந்ததும் முடிவெட்டும் படலம் ஆரம்பமாயிற்று. "It's fine now, isn't it?" என்றாள்.

"How would you like it?" இந்தச் சொற்கள் போதியளவு தெளிவாகவே கேட்டன. ஆனால் என்னத்தைக் கேட்கிறாள் என்றுதான் விளங்கவில்லை.

தயக்கத்தை அவதானித்தவள், மீண்டும் கேட்டாள். "Do you want it short ?" Short என்ற சொல்லைக் கேட்ட மாத்திரத்திலேயே, அதை இறுகப் பற்றிக் கொண்டு "Yes , Yes" என்று தலையைப் பலமாக ஆட்டினான் சந்திரசேகரம். அடிக்கடி இந்தப் பக்கம் வராமல் இருக்கவும் Short தான் மருந்தென்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

பிடரியைக் காட்டி எதையோ கேட்டாள். "Sorry" சொல்லி அவளை மூன்று தடவைகள் திரும்பத் திரும்பச் சொல்ல வைத்தும், Square, round, cut என்று உதிரியாகச் சில சொற்கள் விளங்கினவேயன்றி, அர்த்தம் புரிந்தபாடில்லை. மீண்டும் கேட்க வெட்கப்பட்டு, சும்மா "Yes" என்றான். 'இதுகளையெல்லாம் சலூனில் ஒழுங்காக முடிவெட்டுவிக்கிற மணியண்ணர் முன்கூட்டியே சொல்லித் தந்திருக்கலாம் தானே' என்று மணியண்ணர் மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.



படிப்பகம்

www.padippakam.com

கொஞ்ச நேரம் அமைதியாக வேலை நடந்தது. இப்படியே இருந்து விட்டால் பரவாயில்லை என்று அவன் யோசித்துக் கொண்டிருக்கையில் அவள் மீண்டும் பேசினாள். இந்த முறை அவள் கேட்டது 'பட்' டென்று விளங்கிவிட்டது. எல்லோரும் கேட்கும் கேள்விதான். இந்த நாட்டுக்கு வந்ததிலிருந்து ஐம்பது நூறு தடவைகள் பதில் சொல்லிவிட்ட கேள்வி. "Sri Lankan " என்று பதில் கூறினான்.

அடுத்த கேள்விக்கு "Six months" என்றான்.
தொடர்ந்து இலங்கையில் நடக்கும் சண்டைகளைப் பற்றிய கேள்வி வரப்போகிறதென எதிர்பார்த்துக் கொண்டு 'மள மள' வென்று பதில் களை மனதுக்குள் தயாரிப்பதில் சந்திரசேகரம் தன்னை முழுமூச்சுடன் ஈடுபடுத்திக் கொண்டிருந்த வேளையில்... அவளோ தலைமயிரை மேலே இழுத்துக் காட்டி அதைப் பற்றி ஏதோ வர்ணித்தது போலிருந் தது. Thick என்ற சொல்லைக் கொண்டு, தன்னுடைய தலைமயிர் மொத்தமென்று சொல்லுகிறாள் என அனுமானித்துக் கொண்டான்.

"Are you going out tonight? " அவள் கேட்டாள்.
அன்றிரவு Immigration விஷயமாக லோயரைச் சந்திக்க இருந்தான். எனவே தயக்கமின்றி " yes, yes " என்றான்.
"Lovely weather isn't it? What are you planning to do?"
"I have appointment with my lawyer"
"Is it so ?" என்று கேட்டுக் கொண்டே, சிரிப்பைப் புன்சிரிப்பாக அவள் வலிந்து அடக்கிக் கொண்டது போலிருந்தது. ஆனால் அருகே வேறு யாரோ சற்றுப் பலமாகவே சிரித்தது அவனுக்குச் 'சுருக்' கெனத் தைத்தது.

அவளது கேள்விகளின் அர்த்தம் திடீரென்று இப்பொழுது முழுமை யாக விளங்கிவிட்ட மாதிரி இருந்தது.

வெள்ளைக்காரப் பெண்களைப் பற்றி நண்பன் ஒருவன் சொன்ன பாலுணர்ச்சிக் கதைகளெல்லாம் குரங்குகள் போல் மனதிலே வந்து தாவிக் குதித்தன.

அவர்கள் மிகவும் Sexy என்றும், Free என்றும், விருப்பங்களைப் பச்சையாகக் கதைப்பார்கள் என்றும், ஒன்றுக்கு மேற்பட்ட ஆடவர்க ளுடன் ஊர் சுற்றுவார்கள் என்றும், ஒன்றுக்கும் வெட்கப்படவே மாட்டார்கள் என்றும் அவன் கதைகதையாக வர்ணித்ததையெல்லாம் அப்படியே முழுமையாக நம்பியிருந்தான்.

தொடுத்துப் பார்த்த போது, எல்லாம் ஐயந்திரிபற விளங்கிவிட்டது போல்... எதிர்பாராத அதிர்ச்சி. இருதயம் வேகமாக அடிக்க ஆரம்பித் தது.



படிப்பகம்

'இவள் ஏன் என்னுடைய இரவுத்திட்டங்களை விசாரிக்கிறாள் ? தன்னைக் கூட்டிக்கொண்டு போகச்சொல்லிக் கேட்டிட்டாள் என்டால்... இதென்ன அபத்தம். பிள்ளையாரே, என்னை ஏன் இதுக்குள்ள கொண்டு வந்து மாட்டினனி. நான் இப்பிடி என்னுடைய மனிசிக்குத் துரோகம் செய்யிற ஆளோ?'

அவள் தொடர்ந்து ஏதாவது கேட்டுவிடுவாளோ என்ற நினைப்பே உடல் முழுவதிலும் குலைநடுக்கத்தை ஏற்படுத்தியது. 'பிள்ளையாரே பிள்ளையாரே' என்று, வாய் திரும்பத் திரும்ப மந்திர உச்சாடனம் செய்தது. 'தம்' பிடித்தபடி இருந்தான். மனைவி வேறு, முன்னால் வந்து வந்து போனாள். ஒரு கணம் ஒட ஒரு மணித்தியாலம் எடுத்தது.

'எப்போ முடியும்.. எப்போ முடியும்' என்று அவன் தவித்துக் கொண்டிருக்கையில் ....

அவள் பிடரிக்குப் பிடித்துக் காட்டக் கண்ணாடி எடுத்தாள். கண்ட முதலே சந்திரசேகரம் திருப்தி தெரிவித்துப் பலமாகத் தலையை ஆட்டினான்.

"Is it short enough ?" என்று அவள் கேட்டாள். சந்திரசேகரம் முழுச்சம்மதம் தெரிவித்துத் தலையசைத்தான்.

முன்னாலிருந்த கண்ணாடியில் பார்க்க, தலை உரித்த தேங்காயைப் போன்றிருந்தது. இப்படி மொட்டையடிக்கும் எண்ணத்துடன் அவன் வரவில்லை.

கேட்ட காசைக் கொடுத்துவிட்டு, தப்பினேன் பிழைத்தேன் என்று வெளியே ஓடினான் சந்திரசேகரம். 'கதிரமலை... கதிரமலை...' என்று கதிரமலையை நினைத்து மனம் கதறி அழுதது.

www.padippakam.com

# எனது நிறம் கறுப்பு

பாரிஸிலிருந்து

- புவனன் -

"அலேஸியா" மெத்ரோ ஸ்ரேசனில் மின்சாரவண்டி நின்றபோது, ஒரு மென்மையான இளந்தென்றல் என்னைத்தழுவிச்சென்றது. இந்தப் பாதாள குகைக்குள் எப்படி..? எந்தவழியால் இந்தத்தென்றல்! மண்டையைப் பினைந்து கொண்டிருந்த போதுதான் அவள் அந்த மெத்ரோவினுள் ஏறிக்கொண்டாள்.

வழமையாக அவளோடு வரும் அந்த நாயைக் காணவில்லை. எங்கே ஒளிந்து கொண்டது. மெத்ரோ கொம்பாட்மென்ற் முழுவதும் பார் வையை ஓடவிட்டேன். காணவில்லை. செக்கன் கணக்கு இடைவெளிக் குள் கவ்விக்கொள்ளும் மெத்ரோக் கதவுகளும் கவ்விக்கொண்டன. நாய் இல்லை. செத்துப்போயிருக்குமோ என்று நினைப்பதற்குச் சங்கடமாயிருந் தது. அவ்வளவு திடகாத்திரமான அந்த குதிரை போன்ற நாய் எப்படிச் செத்திருக்கும் ?
ஒருவேளை விபத்து ! மனசு சஞ்சலப்பட்டது.

இரவு வேலை முடித்துக்கொண்டு திரும்பும் கடைசி மெத்ரோவினுள் அவளைப் பலதடைவைகள் சந்தித்திருக்கிறேன்.



படிப்பகம்

www.padippakam.com

அவள் ஒரு ஸ்பானிய நாட்டவளாகத்தான் இருக்கவேண்டும். அவளுடைய தோற்றமும் மொழியும் அப்படித்தான் சொல்லிற்று. வயசு ஐம்பது இருக்கலாம். அழுக்குப்படியாத ஆடைகள். இருபத்தியேழு பாகை வெப்பநிலையிலும் ஒன்றுக்கு மேல் ஒன்றாக நான்கைந்து உடுப்புக்கள் அடுக்கியிருப்பாள். அவளோடு அந்தக் குதிரை போன்ற நாய் எப்போதும் ஒட்டிக்கொண்டே இருக்கும்.

மெத்ரோவின் ஒரு கதவோரம் சாய்ந்து நின்றபடி பயணிகளை ஒருதடவை அமைதியாக நோட்டம் விடுவாள். பின், தனதுமொழியில் ஏதேதோ பாடிவிட்டு கைகளை நீட்டியபடி வருவாள். அவளுடன் அவளது அந்த நாயும் அமைதியாக வலம் வரும். அவள் பாடும்போது பலர் சிரிப்பதையும் பார்த்திருக்கிறேன். அந்தளவுக்கு அவளது பாட்டில் இசைஅழகோ குரல்வளமோ இருப்பதாக எனக்கும் தெரியவில்லை.

அவள் எதையும் அசட்டை பண்ணுவதாயும் இல்லை. முகத்தில் சாந்தமும் மென்மையான புன்னகையும் எப்போதும் தவழும். அவள் கைகளை நீட்டி வரும் போது சில சில்லறைகள் விழும். சிலவேளைகளில் ஒருவருமே போடமாட்டார்கள். ஆனாலும், அவள் அடக்கமாக நாகரீகமாக தன்தொந்தரவுக்கு மன்னிப்புக்கேட்டபடி அடுத்தபெட்டிக்கு நகருவாள். நானும் பலதடவைகள் சந்தித்தும் ஒருநாள் கூட சில்லறைகள் கொடுக்கவேண்டுமென்ற உந்துதல் எனக்கு ஏற்பட்டதில்லை. ஒருவேளை வேலை அலுப்பு காரணமாகவும் இருக்கலாம்.

இன்றுமட்டும் ஏன் இப்படி? அவளைப் பார்த்ததிலிருந்து ஓர் இனம்புரியாத வேதனை என்னை வாட்டுகிறது! நான் அவளையே பார்த்துக்கொண்டிருந்தேன். நாயில்லாது அவளைப்பார்க்க ஒரு விதவை போலக்காட்சியளித்தாள். வழமையை விட இன்று அவளும் மிகவும் சோகமாகவே இருந்தாள்.

ஒரு தீய நெடி மெத்ரோவினுள் பரவ திரும்பிப்பார்த்தேன். எட்டுப்பத்து வாரங்கள் தண்ணியேகண்டிராத ஒரு வயோதிபம் மெத்ரோவினுள் இருந்தபடியே சிறுநீர் கழித்துக்கொண்டிருந்தது. அசுத்தக்காற்று மெத்ரோவை அடைத்தது. சிலர் மூக்கைச்சுழித்தனர். அருகிலிருந்த சிலர் வேறு இருக்கைகளுக்கு மாறிக்கொண்டனர். சிலர் அசட்டை பண்ணாது அப்படியே இருந்தனர். எனக்கு நேரெதிராக இருந்த வெண்தோல் மனிதன் கழுத்துப்பட்டையை சரிபார்த்துவிட்டு மீண்டும் கையிலிருந்த புத்தகத்தில் மூழ்கினான். எனக்கும் குமட்டிக்கொண்டு வந்தது. அடக்கிக்கொண்டேன்.

அவள் பாடத்தொடங்கினாள். சிரிப்பதற்கென்றே தயார்நிலையில் இருந்தவர்கள் போல, அருகு ஆசனத்திலிருந்த இரண்டு வெண்தோல் யுவதிகளும் வெடித்துச்சிரிக்கத்தொடங்கினர். அவர்களால் அடக்கமுடியவில்லை. அவள் தொடர்ந்து பாடிக்கொண்டே இருந்தாள். நான்



படிப்பகம்

www.padippakam.com

பொக்கற்றினுள் கையை விட்டு கிடந்ததை துளாவினேன். இருபது பிராங்குகள் வரையில் தேறியது. ஒருவித உற்சாகத்தோடு தயார்நிலையில் வைத்திருந்தேன்.

அவள் பாடிமுடித்து விட்டு எதிர்முனைக்குச் சென்றாள். சில சில்லறைகள் விழுந்தன.
வயோதிபம் 'முனகு'வது கேட்டது. அவளைப்பார்த்துத்தான். அவள் மெல்லிய சிரிப்பால் பதில்கொடுத்து விட்டுக் கடந்தாள். வயோதிபம் தொடர்ந்து கொண்டே இருந்தது.

அவள் என்னருகில் வந்தாள். முன்னுலிருந்த வெண்தோல் மனிதன் முன் அவள் கைகள் நீண்டபோது அவன்தலைகள் குறுக்காக அசைந்து கொண்டன. அவள் நீட்டாமலே காசைக் கொடுப்பதற்காக உன்னினேன். முகத்தைச்சுழித்தபடி 'வெடுக்' கெனத்திரும்பிய அவள் அருகிலிருந்த யுவதிகளிடம் நீட்டினாள். அவர்கள் எங்கேயோ கவனத்தைச் செலுத்துவது போல நடித்துக்கொண்டிருந்தனர். அவள் என்னைக் கடந்து போய்க்கொண்டிருந்தாள். என்கையிலிருந்த சில்லறைகள் விறைத்துப்போய்க் கிடந்தன.

ூ



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு இளைய மூச்சு

நோர்வேயிலிருந்து

- தமயந்தி-

அதோ! அந்த முனங்குப் பாறையின் கிழட்டு அஸ்க்கமரத்தின் நிழலில் உயிர் பெற்ற பாறைபோல் ஏதோ அசைகிறதே. இல்லை. அது மனிதன். அங்கென்ன செய்கிறான் - தனியாக இருந்து அலைகளை நோக்கியபடி! அவனது உதடுகள் அசைகின்றன. அவன் எதையோ பேசிக் கொண்டிருக்கிறான். யாருடன் பேசுகிறான்? அவனருகில் யாருமே இல்லையே ? இந்தக் கிழட்டு மரத்துடன் பேசுகிறானா?—அல்லது, அந்தப் பாறைகளுடன் பேசுகிறானா? அல்லது அந்த முனங்கில் கண்சிமிட்டும் வெளிச்சவீட்டுடன் பேசுகிறானா? அதுவுமில்லையேல் அலைகளுடன் உரையாடுகிறானா? அவனருகில் யாருமே இல்லையெனில் பின் எதனுடன்தான் அவன் உரையாடுகிறான் . . . ? அவன் எதையோ நிறையப் பேசுகிறான் என்பது உண்மை. ஆனால் யாருடன் பேசுகிறான்? அல்லது எவற்றுடன் உரையாடுகிறான் என்பதுதான் தெரியவில்லை. அந்தோனியார் என்ற புனிதர் மீன்களுக்குப் போதித்தாரென்று கத்தோலிக்கக் கதையொன்று உண்டு. அதுபோல் அந்த மனிதனும் மீன்களுக்கு உபதேசம் செய்கிறானா? அல்லது அவனொரு பைத்தியமாக. . ? அண்மையில் சென்று பார்த்தால் என்ன ? பார்ப்போம். இல்லை இவன் பைத்தியமுமல்ல. பார்த்தாலே தெரிகிறது. சரி, இவன் யாரோடு, எவற்றோடு உரையாடுகிறான் என்பது பின்கதையாயிருக்கட்டும்.



படிப்பகம்

www.padippakam.com

இப்படி இருந்து வாற காலத்திலே என கூறிக்கொண்டு, இவன் என்ன தான் பேசுகிறான்? , உதடுகளுக்கு ஓய்வு கொடுக்காமல் இவன் என்ன தான் பேசித் தொலைத்துக்கொண்டிருக்கிறான் ?

'நம்பியிருந்த ஒரேயொரு ஆதாரமும் கைவிரிச்சுப்போட்டுது. ரமேஸ் எங்கயாவது புரட்டித் தருவானெண்ட நம்பிக்கையில காசிப்பிள்ள மாமாவுக்கு அடிச்சுச் சொல்லிப் போட்டன் ஒரு கிழமைக்குள்ள அனுப்பிறனெண்டு. இப்ப என்னடாண்டால் ரமேஸ் சொல்லுறான் உடம ஏதாவது பொறுப்புக் குடுத்தாத்தான் மாறலாமாம். அதுகும் பத்து வட்டியாம். வட்டி பிரச்சனையில்ல அவசரத்துக்கு பத்து வீதமா, இருபது வீதமா எண்டு கணக்குப் பாக்கேலாது. உடமயெண்டால் ஆர்ர தாலிய அறுக்கிறது நான் ? வந்த கடிதம் ஒரு கிழமைக்கு முந்தி வந்திருந் தாலாவது சமாளிச்சிருக்கலாம்.

போகவர போட்டுக்கு ஆயிரம் குரோணர். அங்க ரெண்டு பஸ், இங்க ரெண்டு பஸ் அதில எண்பது குரோணர். கூடவந்த மூணு பெடியளும் போகேக்க எனக்கு கோலாவும், சிப்ஸ்சும் வாங்கித் தந்தாங் கள். வரேக்குள்ள அவங்களுக்கு நான் வாங்கிக் குடுத்தன். கோப்பி எடுப்பமெண்டால் கோலாதான் வேணுமெண்டு அடம் பிடிச்சாங்கள். போட்டுக்குள்ள எல்லாம் டபுள் விலை. அதுக்குள்ள மட்டமா நூறு குரோணர் துண்டு. அந்தப் பிள்ளைக்கு ஒரு நூறு குரோணர் அன்பளிப் புக் குடுக்கலாமெண்டு தான் கணக்குப் போட்டன். ஆனால் , அங்க எல்லாச் சனமும் பெரிய பெரிய பாசலுகளும், ஆயிரம், ரெண்டாயிரம், ஐயாயிரம், சங்கிலி மோதிரமெண்டு பெரிய பெரிய லெவலில வரிசையில நிண்டு குடுத்துதுகள். அட அதுதான் பரவாயில்ல... ஊரில பணச்சடங் குக்கு சத்தமா ஆரார் எவ்வளவு தருகினமெண்டு சபைக்குத் தெரியச் சத்தமாச் சொல்லி எழுதிறது மாதிரி ஒருதர் சூட்கெசோட, இன்னொ ருதர் கொப்பி பென்னோட இருந்துகொண்டு, இன்னார் ஆயிரம், இன்னார் ரெண்டாயிரம், இன்னார் அஞ்சுபவுண் செயின் எண்டு எல்லாருக்கும் கேக்கிறமாதிரி பெரிய சத்தமாச் சொல்லி எழுதிக்கொண் டிருந்தாங்கள். இந்த நிலமயில சபயில குந்திச் சாப்பிட்டிட்டம். நூறு குரோணரா குடுக்கிறதெண்டு நினைச்சுக் கொண்டு கிடந்ததெல்லாம் தட்டிக்கொட்டி அறுநூறு குரோணர் குடுத்தன். 'கதிர்காமநாதன் அறுநூறு , ஸ்டவங்கர்' எண்ட சத்தம் வந்தவுடன சிலபேர் ஞெயாண் டிச் சிரிச்சத அதுக்குள்ளயே கண்டன். சீல உரிஞ்சமாதிரிப் போச்சுது. அதெல்லாத்தயும் விட சனங்களின்ர நளினங்களும், கெப்பேறான கதயளும் மண்டேக்குள்ள குழம்பு கொதிக்கிற மாதிரி ரெத்தத்தக் கொதிக்கப் பண்ணிச்சுது. இந்தக் காஞ்சீபுரம் சாறியளயும், கழுத்து முறியிற நகயளயும் சனம் எங்கதான் புதச்சிருந்து எடுத்துப் பாவிக்குது களோ தெரியாது. நான் கொஞ்சக் காசு அன்பளிப்புக் குடுத்தனானெண் டத நக்கலா ஒருத்தர் சொன்னார் 'என்ன சோசியலோ' எண்டு. அந்த மசிராண்டிப் பிடிச்சுச் சாத்த வேணும் போல கிடந்தது... ஏன் வீணா மரியாதய கெடுத்துக்கொள்ளுவானெண்டு பேசாமலிருந்திட்டன். இந்தப் பயலுகளுக்கென்ன தெரியும் என்ர நிலம...? 'அம்மாவுக்குச் சுகமில்ல.



படிப்பகம்

www.padippakam.com

கடும். யாழ்ப்பாண ஆஸ்ப்பத்திரியளில மருந்தில்ல. கொழும்புக்குத்தான் கொண்டுபோக வேணும். கொண்டுபோறதுக்கான எல்லா அலுவலும் பாத்தாச்சுது. காசுதான் பிரச்சனை. காசிப்பிள்ள மாமா கொழும்புக்கு வாறார். அவர் மூலியமாக் காச அனுப்பிவிடு அம்மாவ உடன கொழும் புக்குக் கொண்டு போக வேணும். அம்மாவச் சாக விட்டிடாத மோனே' இப்பிடி நிறயக் கெஞ்சலுகளோட அப்பர்ர கடிதம் முந்தநாள்த்தான் வந்துது. அந்த அறுவார்ர சாமத்தியச் சடங்குக்குப் போனதில கிட்டத் தட்ட ஆயிரத்தி எண்ணூறு குரோணர் துண்டு. போனமாதச் சம்பளத் தில வீட்டு வாடகயும், கரண்ட் பில்லும் கட்டிப் போட்டு, இந்தியாவி லிருக்கிற சின்னத்தம்பிக்கும், தங்கச்சிக்கும் கொஞ்சம் அனுப்பிப் போட்டு இந்த அறுவாற்ற சாமத்தியச் சடங்குக்கு கொட்டிக் குடுத்தது தான் மிச்சம். அட பிள்ள வயசுக்கு வந்தா வந்திட்டுப் போகட்டன். அதுக்கேன் உலகமெல்லாம் பறயடிச்சு 'எங்கட்டயொண்டிருக்கு வந்து பாருங்கோ' எண்டு விளம்பரப் படுத்திறியள். அவங்கள் இன்விற்ரேசன் அனுப்பினாப் போல விழுந்தடிச்சு நான் போக வேணுமே ? போகாமல் விட்டாலும் பிரச்சனதான். நான் போயிருக்காவிட்டால் அந்த மனுசன் மகளட சாமத்தியத்துக்கு ஊரெல்லாம் சொன்னமாதிரி என்னயொரு நன்றிகெட்ட நாயெண்டு ஊரெல்லாம் தண்டோரா போட்டிருக்கும். மூணு வருசத்துக்கு முந்தி அந்தாள் எடுத்துத்தந்த அஞ்சுமணித்தியால கழுவுற வேலயத்தான் இப்பவும் செய்துகொண்டிருக்கிறன். அதுகும் இன்னும் ரெம்பரறியாத்தான் வச்சிருக்கிறாங்கள். சட்டப்படி இப்பிடி மூணு வருசமா ரெம்பரறியா வச்சிருக்கேலாது. பேமனண்டாக்க வேணும். இப்பிடி சட்டம் கதைச்ச எங்கட ரெண்டுபேர ஏற்கனவே வேலயால நிப்பாட்டிப் போட்டாங்கள். நானும் கதைச்சு தெருவுக்கு வரயேலாது. அந்தாள் முந்தி ஸ்தவங்கரில இருக்கேக்க அவசரத்துக்கு ரெண்டு மூணு தரம் காசுமாறித் தந்திருக்கு. சும்மாயில்ல வட்டிதான். எண்டாலும் அவசரத்துக்கு உதவினது. போகாமல் விட்டிருந்தால் அழகாயிருந்திருக்காதுதான். அட அதுக்கு சாமத்திய விட்டயா இப்பிடிப் பெருசா. . . ? இன்னும் கொஞ்சக் காலம் பொறுத்தா அந்தப் பிள்ளைக் குக் கலியாணம் வந்திற்றுப் போகுது. அதப் பெரிசாக் கொண்டாடலாந் தானே. 'என்னடி நேசம் முதலொரு சொதி, பேந்தொரு சொதி' எண்டது மாதிரி இப்பயொரு கொண்டாட்டம், பிறகு கலியாணத்துக் கொரு கொண்டாட்டமா ? சாமத்தியச் சடங்கு ஹோலில, வெளியில நிண்டு தம்மடிச்ச பெடியள் சொன்னதும் சிலவேள உண்மயாயிருக்க லாம். பெரிசாகின பிள்ள ஒரு வருஷத்துக்கு முந்தியே ஒரு நொஸ்க் பெடியனோட கதைக்குதாம். சிலவேள கலியாணம் கொண்டாடுற சந்தர்ப்பம் வராதெண்டுதான் சாமத்தியத்தப் பெரிசாக் கொண்டாடுகி னமாம். இன்னொருத்தன் சொன்னான் புது மஷ்டா கார் வாங்கிறதுக்கு நினைச்சிருக்கிறேராம். அதுக்குக் கொஞ்சம் காசு குறையுதாம். அதுதான் தனக்கு நல்லாப் பழக்கமான ஆக்களுக்கெல்லாம் ரெலிபோன் பண்ணிச் சொன்னாராம், நீங்க பொருளாக் குடுக்கிறதவிட, காசாக் குடுத்தால் பிள்ளைக்கு நகனட்டேதாவது செய்து போடலாமெண்டு. என்ன புருவத்தோரிச் சீவியம்? தேவைக்குக் கார் வாங்கிறத விட்டுப்போட்டு



படிப்பகம்

www.padippakam.com

இப்ப சனம் பவுள்சுக்காகக் கார் வாங்க வெளிக்கிட்டுதுகள். விலாசம். விலாசம் காட்டுறதுக்கு புதுக்கார் வாங்குறதுக்கு காசில்லயண்டால் பேசாமல் இருக்கிறதுதானே? இப்பிடியொரு விலாசங்காட்டல் தேவ தானா? மற்றவன்ர கஸ்ர துன்பங்கள உணராத சனம். நானொரு விசரன். அவையவயள், தங்கள் தங்களுக்குச் சரியெண்டு படுகிறதச் செய்யுதுகள். இதில நானேன் சும்மா பயித்தியம் மாதிரிப் புலம்பிக்கொண்டிருக்க வேணும். எந்த நேரத்தில என்னத் தேடிக் கெட்ட செய்தி

வருகுதோ தெரியாது. இதுதான் என்ர இப்பத்தய நிலம. இனி நான் ஆரட்டப்போய்க் கையேந்திறது? கேட்ட சனமெல்லாம் கைய விரிச்சுப் போட்டுதுகள். எனக்கு அடுத்த கழுத , தாலியக்கட்டுவான் உதவியா யிருப்பானெண்டால், அவன் நடுவழியில விட்டுப்போட்டுப் போட் டான். தன்ர களிசானயே ஒழுங்காத் தோச்சுக் கட்டத் தெரியாதவன் பொம்பிளயக் கொண்டு ஓடீட்டான். வெளிநாட்டுக்குப் போகப்போறன் காசனுப்பண்ணை எண்டு கொழும்பில வந்து நிண்டு அறுத்தான். அங்க கடன்பட்டு, இங்க கடன்பட்டு அனுப்பினதெல்லாத்தயும் சோக்காடித் திரிஞ்சுபோட்டு ஏஜன்ஞ் ஏமாத்திப் போட்டுது எண்டு கடசியாச் சொன்னான். கனநாளா ஆளின்ர மூச்சே இல்ல. பிறகுதான் தெரிஞ்சுது ஏஜன்ஞ்சிக்காரன்ர சொந்தக்காரப் பிள்ளயக் கட்டீட்டாராம். கோல்பேசில ரெண்டுபேரும் காச்சட்டயோட நிண்டு, ஒராளட தோளில ஒராள் கையப் போட்டுக்கொண்டு படமெடுத்து அனுப்பியிருந்தினம். 'இதுதான் எனது துணைவி. நல்ல அறிவாளி. இவளால்த்தான் நான் மனிதனாய் வாழத்தொடங்கியுள்ளேன்...' எண்டு மனைவிபுராணத்தோட வந்துது கடிதம். சரி, மனிசனாகீட்டானாம், இனி நான் அறிவுசொல்லிக் கடிதமெழுதேலாது. எழுதினாலும் அவனுக்கு அது ஏறாது எண்டது விளங்கீட்டுது. கோபத்த அடக்கிக் கொண்டு, பெரிய பிரயத்தனப்பட்டு ஒரு கடிதம் போட்டன் 'இனியாவது புத்திசாலித்தனமா நட' எண்டு. அடுத்த கடிதம் வந்துது 'எங்கள் வாழ்க்கையை வசந்தமாய்த் தொடங்க உதவுவாயா அண்ணா? ஒரு ஐம்பதாயிரம் குரோணர் அனுப்பு. நான் மேலே வருவேன். பின்பு நமது குடும்பத்தின் எதிர்காலம் வசந்தமாய் மலரும்' கையில அம்பிட்டானெண்டால் குரல்வளயக் கடிச்சே கொல்லுவனவன. தனக்குக் கீழ்ப்பட்ட சின்னனுகள் ரெண்டயும் கள்ளத்தோணியில கொண்டுபோய் இந்தியாவில அகதிமுகாமில விட்டுப்போட்டு, தான் மட்டும் வெளிநாடெண்டு சாட்டுச் சொல்லிக்கொண்டு கொழும்புக்கு ஓடீட்டான். மசிர், குடும்பத்தப்பற்றிக் கொஞ்சமாவது சிந்திச்சிருந்தானெண்டால் இப்பிடி நடந்திருப்பானா...? அவன் கலியாணம் முடிச்சது பிழயெண்டு நான் கோபப்படயில்ல. தானே தன்ர காலில நிக்க வழியக் காணயில்ல, அதுக்குள்ள இன்னொரு பொம்பிளப்பிள்ளயட வாழ்க்கயயும் அநியாயமா... இத நினைக்கத்தான் பத்திக்கொண்டு வருகுது. இவன், வெளிநாடு போகப்போறன், கொடியிழுக்கப் போறனெண்டு கரியாக்கின காசு ஒரு பக்கத்தால வட்டியேறிக்கொண்டிருக்கு. வட்டியும் கட்டயில்ல, முதலும் கட்டயில்ல. எப்ப எல்லாம் ஒண்டா வந்து கழுத்தப் பிடிக்குதோ தெரியயில்ல. ம்... இனி ஆரட்டப் போய்...? இந்தமாதச் சம்பளம் வர இன்னும் பதினேழு நாள்க்கிடக்கு. அதுக்குப் பிறகு அனுப்பி, அங்கபோய்க் கிடச்சு... காசிப்பிள்ள மாமா



படிப்பகம்

www.padippakam.com

இன்னும் நாலு நாளில யாழ்ப்பாணம் போயிடுவார். அவற்ற கைய அங்க எதிர்பாக்குங்கள். இவர் சும்மா போனாரெண்டால்...? சத்தியமா அம்மாவுக்கு ஏதாவது நடந்துதெண்டால் இந்தக் கடலிலயே விழுந்து சாவன். என்னால தாங்கேலாது...

என்னயிது! இந்த இளைய மனிதன் அழுகிறானே - சிறுபிள்ளை போல். இந்த சமூக அமைப்பின் மீது இவனுக்கு எவ்வளவு கோபமிருக் கிறதோ, அதைவிடப் பலமடங்கு இவனுள் சோகமும் உண்டு. இவன் அழுகிறான். இவனால் இப்போதைக்கு முடிந்தது இதுதான். இந்த ஐரோப்பியப் புலத்தில் 'விலாசம்' காட்டும் எமது மண்ணின் மனிதர்க ளுள் சிக்குண்டு அல்லாடும் இந்த மனிதனால் இப்போது அழத்தான் முடியும். அவசரஅவசர வாழ்க்கைக்குள் இந்த மனிதனின் ஆமைவேக வாழ்வு அபசுரமானதாய் நகர்கிறது. காஞ்சிபுரச் சரங்களும், கழுத்து வட்டை முறிக்கும் 'தங்கக் கேபிள்'களும் இவனது வாழ்தலை எள்ளி நகையாடுகின்றன. அம்மா! அம்மா!! என்ற இவனது ஆத்மாவின் ஓலம் பாறை இடுக்குகளிலும், கடலின் அலைகளுள்ளும் பிராணனைத் தொலைத்து அடக்கமாகின்றது. விலாசங்களுடன் போட்டியிட முடியாத மனிதன் மாழ்வது இப்படியேதான் என்பது நியதியாகிவிட்டது.

அம்மா! அம்மா! என வானம் துளாவ எழும் இந்த மனிதனின் கூக்குரலை சிறுமீன் பொறுக்கும் காவாய்ப்பறவைகள் கூட சிறகுகளால் தட்டி ஒதுக்கிவிட்டுப் பறக்கின்றன. அவனது இரத்த நாளங்களை வருத்தியெழும் அழுகுரலை யந்திரப்படகுகளின் இரைச்சல்கள் விழுங்கி ஏப்பமிட்டு கரும்புகையாய்க் கக்குகின்றன. கிழட்டு அஸ்க்கமரம் மட்டும் தனது இலைகளை ஒருதடவை சிலுப்பிக் காட்டி துக்கத்தைத் தெரிவித் தது. துக்கமுணர்ந்த அஸ்க்கமரம். தனது வேர்க்குழந்தைகளை பாறைக ளின் சிறைகளுக்குள் காவு கொடுத்துவிட்டு துக்கத்தோடு நிற்கும் அஸ்க்கமரம் இவனது துக்கத்தையும் உணர்ந்தது. துக்கமுணர்ந்த அஸ்க்கமரம்.

'நானென்ன செய்ய..? நானினி ஆரட்ட..? நானொரு விசரன். என்ர புத்தியைச் செருப்பால அடிக்க வேணும். நாதன் நல்லவன். என்னோட படிச்சவன். பிரான்ஸில இருக்கிறான். ரெண்டு மாதத்துக்கு முந்தியும் அவனோட ரெலிபோனில கதச்சனான். ஏதாவது உதவி தேவப்பட்டால் கூச்சப்படாமல் கேளு மச்சான்' எண்டவன். என்ர குடும்ப நிலம தெரிஞ்சவன். அவன் சின்னனா இருக்கயே அவன்ர அப்பர் செத்துப்போனார். அவனப் படிக்க வைக்க அவன்ர அம்மா சரியாகக் கஸ்ரப்பட்டவ. இடியப்பம் அவிச்சு வித்து, கூலிக்கு மாவி டிச்சு... இந்த விலாசம் காட்டுற சனத்துக்க அவனொரு வித்தியாசமான ஆள். 'கண்ட நிண்ட எடுப்புச்சாய்ப்புகளுக்கு எடுபடாமல் குடும்பத்தைக் கவனி மச்சான்' எண்டு சொன்னவன். அவன் கட்டாயம் உதவி செய் வான். இப்ப அடிச்சால் ஆளப் பிடிக்கலாம். அவன்ர நம்பர்... ஓ இருக்கு. இண்டைக்கு அடிச்சுப் பாப்பம். அடிக்கிறதுக்குக் காசு..? ஒரு



படிப்பகம்

www.padippakam.com

அஞ்சு குரோணர் இருந்தாலாவது அவனுக்கு அடிச்சு பூத் நம்பரக் குடுத்தால் திரும்ப எடுப்பான். விசயத்தச் சொல்லிக் கேக்கலாம். ம்... காசிமாமாவோட கதைக்கிறதுக்காக வாங்கி, யுனிற் முடிஞ்ச ரெலிகாட் கிடக்குது. அந்தக் காட்ட பேடர்ஸ்காத்தாவில ஒரு கடக்காறன் பத்துக் குரோணருக்கு எடுக்கிறான். கட பூட்ட முதல் போனால் அதக் குடுத்துப் போட்டு நாதனுக்கு அடிக்கலாம்.'

இளைய மனிதனின் விழிகளில் நம்பிக்கை. அவனுக்கு ஏதோ நினைவு வந்து நம்பிக்கையைக் கொடுத்துள்ளது. அந்த நம்பிக்கையின் வெப்பத்தில் அவனது விழிநீர் காய்ந்து, உதிர்ந்து, காற்றோடு கலந்து மறைந்துவிட்டது. அவனது தற்காலிக அமர்வுக்கு தனது நிழலில் மடிவிரித்த அஸ்க்கமரத்துக்கு விடைகொடுத்து, பாறைகளை மிதித்து அவன் நடக்கிறான். தொடர்வோம் நாமவனைக் கதையைத் தொடர.

அவனது முகத்தில் பூரிப்பு. தெருவோரத்துத் தொலைபேசியை விட்டு நடக்கிறான். அவனது பெருமூச்சில் ஆறுதலின் கோடுகள் வெளிப்படுகின்றன. அவன் தனது தாயைக் காத்துவிட்டவனைப் போல் மனம் நிறைவாய் நடக்கிறான். அவனது கால்கள் வீதியின் நீளத்தை வேகமாய் அளந்து முடிக்கின்றன. நிலவறையுள் அமைந்துள்ள அவனது இருப்பிடம். அதனோரத்தில் அவனது படுக்கை. அதன் மீது மல்லாந்து அவன். தூக்கம் வரவில்லை. ஆனால் அவனது இதயம் அமைதியாய் இயங்குகிறது. நெஞ்சை அழுத்திய பாரம் சற்றுக் குறைந்தது போல் அவன் அமைதியாக.

'நாதன் , நல்லவன். என்ர ஆபத்துக்கு உதவியிருக்கிறான். அவன் இங்க எனக்குக் காச அனுப்பி, அத நான் எடுத்துத் திரும்பக் கொழும்புக்கு அனுப்ப நாளாகுமெண்டு தானே நாளைக்கு காசிப்பிள்ள மாமாவுக்கு ரெலக்ஸ்சில அனுப்பி வைக்கிறானாம். அவசரம் விளங்கினவன். அவன் எனக்குச் செய்த இந்தக் கடமய நான் சாகிற வரைக்கும் மறக்க ஏலாது. அடுத்த கிழம எப்பிடியும் அம்மா கொழும்புக்கு வந்திடுவா. அம்மாவோட எப்பிடியாவது ரெலிபோனில கதைக்க வேணும். பாவம் மனுசி. நாலு பிள்ளயளயும் பெத்து, கஸ்டப்பட்டு வளத்து ஒரு பிரயோசனமுமில்ல. மனுசிக்குப் பக்கத்தில ஒரு பிள்ள கூட இல்ல. அம்மா...!'

பகல் உறங்கச் சென்றது. அவனது விழிகளையும் தூக்கம் கவ்விக் கொண்டது. இரவை நீண்ட நேரம் ஆட்சியில் அமர்த்த விரும்பாத பகல் அவசர அவசரமாய் தூக்கம் கலைத்து வந்தது. கோடைச்சூரியனின் வெப்பத்தில் புற்கள் பசுந்தன. ஆயினும் அவற்றின் தலைகளின் முனைகள் சூரியனின் அதிவெப்பம் போட்ட சூட்டினால் கருகிப் போயிருந்தன. மணி பதினொன்று. காலை. தபாற்காரன் காகிதப்பெட்டியை அடித்துச் சாத்திய சத்தம் அவனின் தூக்கத்தைக் கலைத்தது. கண்களைக் கசக்கியபடி அந்த இளைய மனிதன் வெளிப்பட்டு தபால்பெட்டியினுள்



படிப்பகம்

www.padippakam.com

கைவிட்டெடுக்கிறான். தந்தி. இவனது பெயருக்கு. யார் கொடுத்தார் கள்..? காசிமாமா. என்ன நடந்திருக்கும்...?
தந்தி.

ஐயோ! என்ர அம்மா...!

அம்மா! அம்மா!! என்ற அவனது ஓலம் வானத்து முகட்டில் இடித்தது. பருவகாலம் மாறியது தலைகீழாய். கோடையின் வயிற்றில் பனி முளைத்தது. கொட்டுண்ட பனி நெருப்பாய் சுட்டது தரையை. முனைகள் கருகிய புற்திடல் பனிக்குவியலுள் புதைந்துகொண்டது. ஒரு மூச்சு. ஒரு இளைய மூச்சு பனிகொட்டும் கோடைவானத்தை நோக்கி, முகில்களைப் புரட்டி மேலெழுகிறது. பருவகாலம் மாறிய வானத்தின் பாதையால் அந்த இளைய மூச்சு சோகமாய் நடந்து செல்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# ஆச்சாரச்சுமை

பாரிஸிலிருந்து

- வி. த. மயில்மேல்அழகன் -

---

அவசரஒலியை எழுப்பியவாறு வீதியில் விரைந்த பொலிஸ் காரின் இரைச்சலில் கண்விழித்த ரவீந்திரன் கட்டிலுக்கு எதிரே இருந்த கடிகாரத்தைப் பார்த்தான். மணி ஏழரையைத் தாண்டியிருந்தது. காலை ஒன்பது மணிக்கு நண்பன் சுதர்சனைச் சந்திக்க வேண்டியது ஞாபகம் வந்தது. ஜன்னலூடாக வீதியை எட்டிப்பார்த்தான். இரவெல்லாம் கொட்டிய பனித்துளிகள் வீதியெங்கும் வெண்மையாகக் காட்சியளித்தது. உள்ளிருந்து பார்ப்பதற்கு அழகாகத்தான் இருக்கின்றது. வெளியே போனால் பனிக்குளிரில்உடம்பெல்லாம் விறைத்துவிடுமே ! ம்.. அகதியென்று வந்த பின்பு குளிரும் பனியும் என்று போர்வைக்குள் புகுந்து கொள்ளமுடியுமா?

அன்பு அண்ணாவிற்கு, இங்கு யாவரும் நலம். தங்கையின் கடிதம் எண்ண அலைகளில் ஓடிக்கொண்டிருந்தது. அண்ணா, எமது நாட்டின், எமது இனத்தின் துயரநிலைக்குள் ஏதோ நாமும் எல்லோருக்கும் வகுக்கப்பட்டது போல் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். எமது நிலையை உனக்கு எடுத்துச் சொன்னால் நீ மனவருத்தப்படுவாய் என்பது எனக்குத் தெரியும். ஆனால் எடுத்துச் சொல்லாமலும் இருக்க முடியவில்லை. ஐயா உனக்கு எதுவும் எழுதவேண்டாமென்று தான் சொன்னார். ஆனால் இன்றைய பொழுது எல்லோருக்கும் இறைவனால்



படிப்பகம்

www.padippakam.com

சனத்தில அதுவும் வெளிநாட்டுக்கு வந்து இந்த அகதிவாழ்க்கையில புலால் உண்ணாம எத்தின பேரால இருக்கமுடியுது? அதையும் நாங்கள் சாப்பிடாட்டி பட்டினி கிடக்கவேண்டியதுதான்.

இன்னொரு விசயம் ரவி இந்த வேலை எடுத்துத் தாறவருக்கு மூவாயிரம் பிராங் கொடுக்கவேணும்.

ரவிக்கு தலையில் சுத்தியலால் அடித்ததுபோல் இருந்தது.
என்னடாப்பா இதுக்கும் லஞ்சமா ?
உனக்குத் தெரியும்தானே ரவி இப்ப வேலை எடுக்கிறதெண்டா எவ்வளவு கஸ்ட்டமெண்டு. நானும் குடுத்துத்தான் வேலை எடுத்தனான். நீ இப்ப காசு குடுக்கத் தேவையில்லை. முதல்மாதச் சம்பளத்தில குடுத்தால் சரி.
இது பெரிய அநியாயம் சன். வீடு வாடகைக்கு எடுக்கிறதெண்டாலும் லஞ்சம் மாதிரி ஏதாவது குடுக்க வேணும். வேலை எடுக்கிறதெண்டாலும் அப்பிடி. எங்கட சனம் இங்க வந்து இப்பிடியெல்லாம் சம்பாதிக்குதுகள்.

ரவி ஒரு பெருமூச்சை விட்டுக்கொண்டான்.
அதுசரி சன் எப்ப வேலைக்குப் போகவேணும் ?

வாற மாதத்தில இருந்து போகலாமென்று சொன்னவர். இருபத்தெட்டாந்திகதியோட இந்த மாதம் முடியுது. நீ நாளைக்கே போய் இடத்தையும் வேலையையும் எப்பிடியெண்டு பாத்து வைச்சியெண்டா அடுத்தநாள் உனக்கு சுகமா இருக்கும்.

ரெஸ்ரோறன்ட் வேலை செய்வது என்று முடிவுசெய்தாகிவிட்டது. எப்படிச் சமாளிக்கப் போகின்றேன் என்பதுதான் தெரியவில்லை. காலங்காலமாக அப்பா முதல் பிராமண முன்னோர்கள் கட்டிக்காத்த பிராமண ஆச்சாரம் எனக்குள்ளும் வளர்ந்திருக்கின்றது. இருபது வருடங்கள் கட்டிக்காத்த ஆச்சாரம். அப்பா சொன்ன போதனைகளை மீறவும் முடியவில்லை. அவலமான இந்த அகதிவாழ்வில் மீறாமல் இருக்கவும் முடியவில்லை. புலாலைக் கண்டாலே அருவருக்கும் நான் எப்படி புலாலுக்குள் நின்று வேலை செய்யப்போகின்றேன். எமது ஆச்சாரங்களை மீறினால் நான் பாவியாகிவிடுவேனா ? இந்தப் புலால் கூட்டுக்குள் உயிரை வைத்து இறைவன் ஏன் இத்தனை தடைகளையும் போட்டான் ?

பலவிதமான ஆடம்பர வாழ்விற்கு ஆசைப்படும் பெண்களின் மத்தியில் தங்கை உமா எழுதிய அன்றாடம் சீவிப்பதற்கு உதவி செய் என்ற உருக்கமான கடிதத்தை நினைக்க ரவிக்கு கண்கள் கலங்கின. ஒரு தங்கை புரட்சி செய்யப் போய்விட்டாள். இனி அவள் திரும்பி வருவாளா என்று நிச்சயமில்லை. தங்கை உமாவையாவது நல்லபடி



படிப்பகம்

www.padippakam.com

வகுக்கப்பட்டதுபோல் எமக்கும் வகுக்கப்பட்டு ஓடிவிட்டது. நாளைய பொழுது என்ன நடக்கப் போகின்றது. நாம் என்ன செய்யப் போகின் றோம் என்பது தெரியாது. பொருட்களெல்லாம் தலைக்கு மேல் விலை. தலையை அடகு வைத்தாலும் பொருட்களை விலைக்கு வாங்க முடிய வில்லை. கடந்த மாதம் அப்பா பூசை செய்யும் கோயிலுக்கு அராஜகப் படை போட்ட குண்டில் கோயில் முற்றாகச் சேதமாகிவிட்டது. அப்பா விற்கும் காலில் சிறுகாயம். கோயில் பரிபாலனக் குழுவெல்லாம் தான் தப்பினால் போதுமென்று ஆளுக்கொரு திக்கில் தலைதெறிக்க ஓடிவிட் டார்கள். அதனால் எமக்கு இருந்துவந்த ஒரே வருமானமும் இல்லாமல் போய்விட்டது. நீ வெளிநாடு போவதற்காக அடகுவைத்த எமது ஒரே சொத்து வீடும் காணியும் வட்டிக்குள் மூழ்கிவிடும் நிலை. அரச பயங்க ரவாதிகளை எதிர்த்துப் போரிடச்சென்ற தங்கையை நினைத்து அம்மா வும் அப்பாவும் தினம் அழுது வடிக்கின்றனர். இங்கு எனக்கிருக்கும் உறவு அம்மாவும் அப்பாவும் தான். அவர்களையும் இழந்துவிடுவேனோ என்று பயமாக உள்ளது. நீயும் வெளிநாடு போய் ஒருவருடமாகிறது. உன்னிடமிருந்து எந்த உதவியும் கிடைக்கவில்லை. அண்ணா, எமக்கு ரி.வி. டெக், கல்வீடு, நகைநட்டு எதுவும் வேண்டாம். குறைந்தபட்ச மாக அன்றாடம் சீவிப்பதற்கு உன்னால் முடிந்த உதவியைச் செய். குறைந்த பட்சம், குறைந்த பட்சம் என்ற வார்த்தை திரும்பத்திரும்ப வந்து அடித்துக் கொண்டிருந்தது.

'அங்கு பெற்றோர், சகோதரம் சொந்த மண்ணில் அகதிவாழ்க்கை, நான் இங்கு அகதிவாழ்க்கை'

பிரான்சுக்கு வந்து ஒருவருடமாகின்றது. இன்னும் அவனுக்கேற்ற வேலை கிடைக்கவில்லை. அகதிகளுக்கான உதவிப்பணமும் தந்துமுடிந் துவிட்டது. வேலை தேடித் தேடி வேலையும் கிடைக்கவில்லை. அகதிப்பணம் வீட்டுவாடகைக்கும், சாப்பாட்டிற்குமே பற்றாக்குறையாகி விட்டது. இதில் வீட்டிற்கு என்ன செய்வது? குளிருக்குப் போடும் கோட்டை எடுத்துப்போட்டுக்கொண்டு மெற்றோவை நோக்கி நடந் தான்.

மெற்றோவுக்குள் சுதர்சன் காத்துக்கொண்டிருந்தான். வணக்கம் சன். சுதர்சன் பிரான்சுக்கு வந்ததும் பிரஞ்சுக்காரர் இலகுவாக அழைப்பதற் காக பெயரைச்சுருக்கி சன் ஆக்கிக்கொண்டான். காலத்திற்கும் நேரத் திற்கும் ஏற்றாற்போல் மாறவேண்டியது தவிர்க்கமுடியாததாகிவிடுகின் றது. ரவீந்திரன் சன்னுடன் கைகுலுக்கிக் கொண்டான். என்ன மாதிரி சன் இண்டைக்காவது வேலை கிடைக்குமோ? நான் நேற்று ஒருத்த னோட கதைச்சனான் ரவி. அவர் ஒரு வேலை இருக்கெண்டு சொன் னவர். ஆனால் அது நீ எதிர்பார்க்கிறமாரி சைவமான வேலையா இருக்காது. றெஸ்ட்றோரனட் வேலை. நீ இன்னும் உங்கட பிராமண கட்டுக்கோப்புக்க இருந்து வெளியில வராததால அது உனக்கு கஸ்டமா இருக்கும். என்னப்பார் நானும் ஒரு சைவன்தான். புலால் உண்ணுவதே பாவமெண்டு சொல்லுது எங்கட மதக்கோட்பாடு. ஆனால் எங்கட



படிப்பகம்

www.padippakam.com

சிறப்பாக வாழவைக்க வேண்டுமென்ற பல கனவுகள். இதெல்லாம் எப்போ நிறைவேறும். காலங்காலமாக குடும்பத்துக்காகவே உழைத்து வலுவிழந்துபோன தந்தை, இனியும் அவரால் முடியாது. அம்மா கிடுகு வேலிக்குள் வளர்ந்தவ. அவவாலும் ஓடியாடி எதையும் செய்ய முடி யாது. நான் என்ன செய்வேன்? தந்தைக்கும், தாய்க்கும் தனயனாக எனது கடமைகளை எப்படி முடிப்பேன்? ரவியின் மனதிற்குள் பலவித மான போராட்டங்கள். யாரை நொந்து என்ன பயன்? எமது மண்ணும் மக்களும் சுதந்திரம் பெறவேண்டும், சொந்த மண்ணில் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் காலம் வரவேண்டும். ரவிக்குச் சிந்தனைகள் பலவாறு ஓடின. இறுதியில் ஏதோவொரு முடிவுக்கு வந்தவனாய் எழுந்து கடிதமெழுதும் பேப்பருடன் மேசையிலமர்ந்தான்.

அன்புள்ள அப்பா, மனநிலை மிகவும் குழம்பிய நிலையிலேயே இக்கடிதத்தை எழுதுகின்றேன். எனது தற்போதைய இக்கட்டான நிலை எம்மைப் போன்ற யாருக்கும் ஏற்படக்கூடாது. ஐயா, வெளிநாடு என்பது சொர்க்கபுரியல்ல. சொந்தங்களையும், சுற்றங்களையும் தொலைத்துவிட்டு முகவரி இல்லாத முகங்களாக இங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். சொந்த மண்ணில் வாழ்ந்தபோது கிடைத்த நிம்மதியும் மனநிறைவும் இங்குகிடைப்பதில்லை. இயந்திரமயமான வாழ்க்கை. இயந்திரங்களோடு பழகிய மனிதர்கள் இயந்திரங்களாகவே மாறிவிட்டார்கள். அவர்களின் உள்ளமும் அப்படித்தான். இதுவரையில் பலவழிகளிலும் முயற்சிசெய்து எனக்கு ஏற்றாற்போல் சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளவும், எமது ஆச்சாரங்களிலிருந்து வழுவாமலுமிருக்க வேலை தேடினேன். கிடைக்கவில்லை. தவிர்க்கமுடியாதபடி இறுதியாக பலமனப்போராட்டங்களுக்கு மத்தியில் இந்த முடிவுக்கு வந்திருக்கி றேன்.

ஐயா! வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு நான் செய்வது பாதகமாகவோ அடாதசெயலாகவோ இருக்கலாம். ஆனால் என் நிலைமையில் என் னைப்பொறுத்தவரையில் நான் செய்வது பாவமாகப் படவில்லை. எமது அகதி வாழ்க்கையில் எமது ஆச்சாரங்கள் எமக்குப் பெரும் சுமையாகவே இருக்கின்றது. என்னைப்பற்றி ஊர் என்னசொன்னாலும் பரவாயில்லை. எனக்குத்தெரியும் என்னுள்ளம் தூய்மையானது, நான் ஒரு துளியேனும் மற்றவர்களுக்கு தீங்கு நினைக்காதவன். எல்லா உயிர்களையும் நேசிப் பவன். சாஸ்திரங்கள் உண்மையாக இருக்கலாம். ஆனால் எனக்கு இங்கது உயிர்வாழ்வதற்கே தடையாக இருக்கிறது. ஆதலால் அதை மீறுவது தவிர்க்கமுடியாததாகிறது. அக்கினிதேவன் முன்னிலையில் நாள்பார்த்து நட்சத்திரம் பார்த்து அன்று என் தோளில் பூனூல் ஏறியபோது பூரிப்படைந்தேன். ஆனால் அதுவே இன்று எனக்கு சுமையாக இருக்கும்போது என்னால் என்ன செய்ய முடியும்? ஐயா, என்னை மன்னித்து விடுங்கள்...

கடிதத்தை முடித்துவிட்டு எழுந்து 'என்வலப்'பைத் தேடினான்.



படிப்பகம்

www.padippakam.com

# தங்கமடி தங்கம்

சுவிஸிலிருந்து

- ஏ.ஜே. ஞானேந்திரன் -

நேரத்திற்கு வந்துவிட்ட டிராமில் ஏறிக் கொண்டபோது காந்தனுக்கு மனதிற்குள் உற்சாகம் கொப்பளித்தது.

"உனக்கு எங்கடா டிக்கட் கிடைக்கப் போகிறது" என்று ஒரு 'நக்கல்' சிரிப்போடல்லவா வசந்தன் சொல்லியிருந்தான். 'சும்மா பேய்க்கதை கதையாதையும். டிக்கற்றோட வரேல்லையண்டா ஒருபக்க மீசையை வழிச்சிப் போடுறன்' என்ற சவாலோடல்லவா அவன் புறப்பட்டுப் போனான். வசந்தன் சொன்னத்திலும் பிழையில்லைத்தான். கடையில் டிக்கட்டிற்கு ஒரே அடிபாடுதான். எனினும் ஒரு பெரிய நோட்டும், இன்னொரு சிறிய நோட்டுமாக, 150 பிராங்கை எறிந்து, ஒரு டிக்கட்டின் சொந்தக்காரனாகிய போது, அவனுக்கு இமயமலையின் உச்சியில் ஏறிய பூரிப்பு.

"பேயன் வசந்தன் என்னையும் பேயன் எண்டு நினைச்சிட்டான் போல கிடக்கு.
ஓடிக்கொண்டிருந்த டிராமில் அவனையறியாமல் அவனுள் ஒரு சிரிப்பு முளைத்தது.

அடுத்த தரிப்பிடத்தில் டிராம் நின்றது. ஒரு சிலர் இறங்கினார்கள். இன்னும் சிலர் ஏறினார்கள். விதுாஷன் அந்த டிராமில் ஒரு



படிப்பகம்

www.padippakam.com

பயணியாக ஏறுவது காந்தனுக்குத் தெரிந்தது. தன் உற்சாகத்தை தனக்கு ஏற்கனவே அறிமுகமான விதுாஷனோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் போலிருந்தது.

'விது..' என்றான் மெல்லிய குரலில். காந்தனின் குரல் கேட்டு, புன்முறுவலோடு விது காந்தனின் இருக்கையின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான்.
அவன் உட்கார்ந்ததும் உட்காராததுமாக, காந்தன் ஷேர்ட் பாக்கட்டிலிருந்த டிக்கற்றை விதுவின் கண்முன்னே நீட்டினான்.

மிட்டாயை குழந்தை ஆவலுடன் பார்ப்பது போல விது டிக்கற்றை கையிலெடுத்து மேலும் கீழுமாக ஆவலோடு பார்த்தது, காந்தனுக்கு படு உற்சாகத்தைக் கொடுத்தது.

'குஷ்புவின்ர புரோகிராமுக்கு டிக்கற் வாங்கிப் போட்டீர் போல கிடக்கு' என்றான் விது.
'பெரிய கஷ்டப்பட்டு எடுத்துப் போட்டன் விது. நீரும் புரோகிராமுக்கு போறீரோ?'
'என்ன பகிடி விடுகிறீரா காந்தன் ? வந்து ஒரு வருஷத்துக்கு மேல போயற்றுது.. வேலை ஒண்டைத் தாறாங்களா இந்த வெள்ளைக்காரன் கள் ? இப்போதைக்கு வேலை செய்யேலாது என்கிறாங்க.. இந்த இழவில எந்தக் குஷ்புவைப் பார்க்கிறது ?'

விதுவின் பேச்சில் அவன் இயலாமை பளிச்சிட்டது. அவன் நிலைமையைப் பார்த்து பரிதாபப்படுகிற நிலையிலா இருக்கிறான் காந்தன் ?
அவன் உற்சாகத்தோடு மேலும் பேச்சுத் தொடுத்தான்.
'ஒரு ஐஞ்சு பவுண் சங்கிலியாவது குஷ்புக்கு போடலாமெண்டு இருக்கிறன். போடுற நேரத்தில ஒரு போட்டோ எடுக்க வேணும்...'
விது அவனை வியப்போடு பார்த்தான். அஞ்சு வருஷத்துக்கு மேல சுவிஸ்ஸில இருக்கிற இவன் அஞ்சு பவுணிலும் போடுவான். பத்துப் பவுணிலும் சங்கிலி வாங்குவான்.. என்னால் முடியுமா ?

'கொக்காவின்ர நகைகளை வித்துத்தான் இங்க வந்தனான். அதுகளைச் செய்து கொடுக்க இரண்டு வருஷம் உழைக்க வேணும். இப்போதைக்கு எந்த குஷ்புவையும் நினைக்கேலாது.. சரி, டிராம் ஹால்ட் வந்திட்டுது. நான் இறங்கப் போறன்.. போட்டோ எடுத்தால் எனக்கும் ஒரு கொப்பி தாரும்..'

சமயாசமயத்தில் ஒரு வேலை இல்லாததும், உழைத்து ஏதாவது சேர்த்தாலும் ஊருக்கு அனுப்பியே ஆக வேண்டும் என்ற ஆதங்கமும் அவனுள் வியாபிக்க, டிராமிலிருந்து இறங்கிச் சென்றான் விது.
காந்தனோ குஷ்புவின் கனவில் பயணத்தைத் தொடர்ந்தான்....



படிப்பகம்

www.padippakam.com

* * *

'உங்கட கரைச்சல் பெருங்கரைச்சல்.. அவன் காந்தன் காசு அனுப்பி இப்ப எத்தனை மாசம்? எட்டு மாசத்திற்கு முந்தி இருபதினாயிரம் அனுப்பினான். பிறகு பேச்சு மூச்சே இல்லை. போன மாசம் ஒரு கடிதம் போட்டிருந்தான். கையில காசில்லையாம். மிச்சம் பிடிக்க ஏலுதில்லையாம். எங்களை இப்ப சமாளிக்கட்டுமாம். பிறகு காசு அனுப்புறானாம்.. இவன் நாய் எங்க அனுப்பப் போகிறான் ? நீங்க என்னடாவெண்டா சித்திராவுக்கு கல்யாணம் பேசிறியள்.. நகையளுக்கு எங்க போகிறது ?

கனகம்மாவின் பேச்சில் வெறுப்புத் தொனித்தது. வாய்க்குளிருந்த வெற்றிலைச் சாறை அவள் வேலிப் பக்கமாக துப்பிய போது, யார் மீதோ கோபத்தோடு காறி உமிழ்ந்த வேகம் தெரிந்தது.

தோளில் இருந்து நழுவிய துண்டை, லாவகமாக மேல் தோளுக்கு நகர்த்தியபடி 'உனக்கு எப்பவுமே அவன் காந்தனைப் பற்றி கீழ்த்தரமான நினைப்புத்தான்..'
வாயிலிருந்த சுருட்டு அணைந்திருக்க வேண்டும். பக்கத்திலிருந்த கைவிளக்கை எடுத்து, சுருட்டை மீண்டும் பற்ற வைத்து , இரண்டு தடவை ஆசை தீர புகையை உள்ளிழுத்து வெளியே ஊதிய செல்லத் துரை இருமியபடி பேச்சைத் தொடர்ந்தார்..
'கனகம்.. மாப்பிள்ளை வீட்டார் இப்ப எத்தனை பவுண் நகை கேக்கினமாம்...?'

பக்கத்து வீட்டு பாக்கியம் தனது தோட்டத்தில் விளைஞ்ச கத்தரிப் பிஞ்சுகளில் ஐந்து ஆறை அன்று கொடுத்திருந்தாள் கனகத்திற்கு... அவற்றை நீட்டாக சீவி பாத்திரத்தில் போட்டபடி கணவனை ஒரு முறைப்போடு பார்த்தாள் கனகம்.
'இந்த வீட்டோட மொத்தம் இருபது பவுண் நகை கேக்கினம். வெறும் கமஞ் செய்யிற பொடியனுக்கு இவ்வளவாம். என்ன செய்யிறது பொடியள் பஞ்சத்தால, பொட்டைக் குஞ்சுகளைப் பெத்த எங்களுக்கு பெரிய வேதனை. என்ர கழுத்தில இருந்த கொடியையும் வித்து அஞ்சரை வருஷமாச்சு.. இண்டு வரை என்ர கொடிதான் இல்லை. கூடப்பிறந்த கொக்காவிற்கு எண்டாலும் நகைநட்டைச் செய்யப் பணம் அனுப்பினானா பாவிப்பயல் ? பிச்சைக் காசு அனுப்பிற மாதிரி நாக்கு வழிக்க வருஷத்தில இரண்டு தரம் இருபதாயிரம் இருபதாயிரம் அனுப்பி வைக்கிறான்...'

அவள் மனநிலை, கத்தி வேகமாகக் கத்தரிப் பிஞ்சுகளைச் சீவித் தள்ளிய போது தெரிந்தது.



படிப்பகம்

www.padippakam.com

எடி பிள்ளை ... வீணா அவனைக் கரிச்சுக் கொட்டாத.. நான் கொழும்புக்குப் போய் போன் பண்ணிக் கேக்கப் போறன். கட்டாயம் பணம் வரும்.. யோசிக்காதை.. மேற்கொண்டு காரியத்தைப் பார்...

அவர் நம்பிக்கைகளில் வாழ்பவர். தன் இரத்தத்தின் இரத்தம் தனக்கு காலை வாரிவிடாது என்ற மனஉறுதியில் அவர் வாழ்கிறார். . பெற்றவளுக்கோ அந்த நம்பிக்கை தகர்ந்து போயிருக்கிறது. கடந்த

காலத்தின் கசப்பான அனுபவங்கள், வருங்காலக் கோலங்களை அவளுக்குத் தெளிவுபடுத்துகின்றன.

'கப்பல் கொழும்புக்கு எப்ப போகுது எண்டு கேட்டிட்டு வாறன் கனகம்'

தோளில் கிடந்த துண்டை ஒருமுறை உதறி மீண்டும் தோளில் போட்டுக் கொண்டு புறப்பட்டார்.

* * *

என்ன கோலாகலமான வரவேற்பு ..? எவ்வளவு கவர்ச்சியாக குஷ்பு வலம் வந்தாள் ?

கையிலிருந்த போட்டோவை அவன் இத்தோடு நூறாவது தடவைக்கு மேல் பார்த்து ரசிக்கிறான்..

போட்டோ எடுத்த ரமேஷ் சூரன் தான். (அதற்கு கூட அவன் லஞ்சமாக 20 பிராங் பிரத்தியேகமாகக் கொடுத்திருந்தானல்லவா?) அந்த வாளிப்பான உடலை ஒட்டியும் ஒட்டாததும் போல காந்தன் நிற்கிறான் . அந்த 5 பவுண் சங்கிலியை கழுத்தில் போட்டபோது , சங்குக் கழுத்தை கைகள் ஸ்பரிசித்த போது, மின்சார அதிர்ச்சிக்கு உள்ளானவன் போலானான். அந்தக் கணம் அவன் கால்கள் நிலத்தில் இல்லை.. அந்த மயக்கும் அழகியின் மாம்பழக் கன்னங்களைத் தொட்டும் தொடாத நிலையில் (தன் முகம்) , கழுத்தில் சங்கிலியைப் போட்ட விரல்கள் சங்குக் கழுத்தை வருடியும் வருடாத நிலையில் அல்லவா போட்டோ எடுத்திருக்கிறான் அந்த எமகாதகன் ரமேஷ். இன்னொரு இருபது பிராங் பரிசாகக் கொடுக்கலாம் போலிருந்தது. அப்படி ஒரு போட்டோ.

வாழ்க்கையில் ஒரு அர்த்தமே இல்லை என்று இதுவரை நினைத்தவனுக்கு , இப்பொழுது வாழ்க்கையில் ஒரு பிடிப்பு ஏற்பட்டு விட்டது போன்ற ஒரு உணர்வு மனதை நிறைக்க ஆரம்பித்திருந்தது... குஷ்புவே தனது வாழ்க்கைத் துணைவியாகவும், தான் கழுத்தில் போட்ட சங்கிலியே ஒரு தாலிக்கொடியாகவும் , எண்ணங்கள் சிறகடித்து , அகண்ட வானில் உற்சாகமாகப் பறக்க ஆரம்பித்த போதுதான் அந்த பாழாய்ப் போன டெலிபோன் அடித்தது.

'சைஸ' (இது ஜெர்மன் பாஷையில் தரித்திரம்) கனவுகள் அறுபட்ட ஆத்திரத்தோடு, டெலிபோனைக் கையிலெடுத்து 'ஹலோ காந்தன்



படிப்பகம்

www.padippakam.com

ஹியர்' என்றான். இடக்கை டெலிபோனைப் பிடிக்க, வலக்கையிலிருந்த போட்டோவிலுள்ள குஷ்பு அவனைப் பார்த்து, ஓரக்கண்ணால் சிரிப்பது போலிருந்தது.
'உங்கட அப்பா பேசப் போகிறாராம்.. பேசுங்க..'
அப்பர் கொழும்புக்கு வந்திட்டேரோ...
குஷ்பு ஒரு கணம் தனியனானாள்...

'அப்பா நான் காந்தன் பேசுறன்..'
தம்பி சுகமாக இருக்கிறியா? இண்டைக்குத்தான் வந்தனான். கொக்காவின்ர கல்யாண விசயமா வந்தனான் என்று மறுதரப்பில் அப்பா சொல்லத் தொடங்கிய போது, காந்தனின் முகம் கறுக்க ஆரம்பித்தது.

தந்தை பேசுவதைத் திடீரெனக் கத்தரிப்பது போல, கோபத்தை அடக்கிக் கொண்டு, 'அதுக்கு கடிதம் போட்டிருக்கலாமே.. இந்தப் பிரச்சினைக்கிள கப்பலில வர வேணுமே... பிறகு காசு அனுப்பிறன் எண்டு எழுதிக் கடிதம் போட்டனான் அல்லே' என்றான்.
தம்பி பிறகெண்டா எப்ப ராசா, கையோடு உன்னட்ட காசு வாங்கிக் கொண்டு போவம் எண்டு தான் வந்தனான். கொக்காட்ட இருக்கிற 15 பவுண் நகையோட இன்னொரு ஐஞ்சு பவுணாவது செய்து போடவேணும்.. கல்யாணச் செலவுக்கும் கொஞ்சக் காசு வேணும். என்ர பென்சனில என்ன செய்யுறது. மூண்டு குமருகள்.. உனக்கு சொல்ல வேணுமே. . ஒரு ஐம்பதாயிரமாவது இண்டைக்கு ரெலக்ஸில அனுப்பி வைச்சியெண்டா...
அவன் பேச்சின் இடையில் குறுக்கிட்டான். இப்பொழுது அடக்கி வைத்திருந்த ஆத்திரம் பேச்சில் பீறிட்டது.

'என்னை என்ன காசு 'காய்க்கிற மரம் எண்டு நினைச்சிட்டியளோ - கேட்ட கையோட பிடுங்கி அனுப்ப. நீங்க இப்ப ஊருக்கு போங்க.. நான் பிறகு அனுப்பி வைக்கிறன்.'

அவன் டெலிபோனைப் படீரென வைத்துவிட்டு தனது கட்டிலில் வந்து தொப்பென விழுந்தான். ஒரு இனிமையான சுகானுபவத்தை, பாதியில் ஒரு அக்கிரமக்காரன் வந்து பறித்துப் போய்விட்ட மனநிலை அவனுக்கு.



படிப்பகம்

www.padippakam.com

# வெள்ளை இருட்டில் ஒரு கருப்பு வெளிச்சம்

பாரிஸிலிருந்து

- பேராசிரியர். சக்திப்புயல் -

அந்தப் பிப்ரவரி மாதத்துப் பிரெஞ்ச்சு வானம் சாம்பல் நிறத்தைச் சாசுவதமாக்கிக் கொண்டிருந்தது. இரண்டு மாதகாலமாகவே இருட்டுச் சுருணைக்குள் சூரியப்பந்து சுருண்டு கொண்டது. காலை எட்டரை மணி அளவில் இரவு இருட்டு இலேசாக இளகிப் பகலிருட்டாகும். இதற்குத் தான் இங்கே விடியல் என்று பெயர். அதைக் கூட டெலிவிஷன் அறிக்கையை வைத்துத்தான் தெளிவாகச் சொல்ல முடியும்.

இந்த 'விடியலில்' போந்துவாஸ் தொடர் வண்டி நிலையம் ஒரு பாரிஸ் புறநகருக்குரிய இயந்திரச் சுறுசுறுப்போடு இயங்கிக் கொண்டிருந்தது . ஒன்பது மணிக்குள் அலுவலகத்தை அடைந்து விடுகிற ஒரே குறிக்கோளோடு பம்பரமாய் வந்து சேர்ந்தனர், பயணிகள். அவர்களின் கால்கள் கடிகார முள்ளாய் இயங்கினாலும் கைகள் கருப்புக் கோட்டுகளுக்குள் தஞ்சம் புகுந்திருந்தன. அவர்களின் முகங்கள் இறுகிக்கிடந்தன. இவர்கள் எதை இழந்துவிட்டு இப்படி இறுகிப்போய்க் கிடக்கிறார்கள்? என்னத்தைப் பிடித்துவிட இப்படி ஓடுகிறார்கள் ? எப்போது எங்கே இளைப்பாறுவார்கள் ?



படிப்பகம்

www.padippakam.com

இரண்டு பேர் என்னை இடிக்காத குறையாகக் கடந்து போனார் கள். ரயில் வந்திருப்பது நினைவுக்கு வர நானும் ஏறினேன். என் காதோரத்தில் வந்த ஷனெல் நெடி என்னைச் சட்டென்று திரும்பச் செய்தது.

கொள்ளை வண்ணங்களை முகத்தில் அள்ளிப் பூசியிருந்த அந்த வெள்ளைக் கிழவிக்கு விலகி வழிவிட்டு என் முன்னால் இருந்த இருக்கையைக் காட்டினேன். அவளது மிளகாய்ப் பழக்கலர் ' மெர்சி' யில் கிறங்கிப் போய் 'தெரியேன்' என்றேன். அந்தச் சிவப்புச் சாயத்தைப் போலவே அவள் சொன்ன நன்றியும் உதட்டுக்கு வெளியே பூசப்பட்டி ருந்த உண்மை என எனக்கு உறைக்க சற்றுநேரம் பிடித்தது. அது அவளுக்கொரு அனிச்சைச்செயல். மற்றும்படி அவள் இமைகொட்டும் நே ர ம்
கூட என்னை ஏறெடுத்துப் பார்க்க முயன்றதாகத் தெரியவில்லை. என் இளிச்சவாய்த்தனம் எனக்குப் பிடிபட ஆரம்பித்தது. அதற்குள் என் னைச் சுற்றியிருந்த அத்தனை இருக்கைகளும் ஆட்கொள்ளப்பட்டு விட்டன. இடம் கிடைக்காமல் எஞ்சியிருந்த இரண்டொரு பேரில் நானும் ஒருவன்.

ரயில் புறப்பட்டது. ஜன்னலுக்கு வெளியே புல் முனையிலும், புதர்களின் மேலும் அமர்ந்திருக்கும் வெண்பனிப் பஞ்சுகளின் வேகமான கண்ணாமூச்சி ஓட்டம் கூட என் கவனத்தை ஈர்க்கவில்லை. ஏமாந்து போன எரிச்சலில் என் ரசனை மரத்துப் போனது.

அதற்குள் ரயில் 'அஷெர்வில்' லுக்கு வந்து நின்றது. கதவு திறந்த தும் விசுக்கென்று வீசியது வெளிப்புறக்குளிர். என் பெட்டிக்குள் நுழைந்த இரண்டு பேரைத் தொடர்ந்து ஒரு ஆபிரிக்கன் ஏறினான். நான் சற்று அருவருப்போடு ஒதுங்கி வழிவிட்டேன். அவன் உள்ளே போகாமல் என் அருகிலேயே நின்று என் எரிச்சலை அதிகமாக்கினான்.

ஓரக்கண்ணால் ஒரு நொடி நோட்டமிட்டேன். ஒரு ஐம்பது வயது இருக்கலாம். என்னைவிட ஒரு சென்றிமீட்டர் குட்டையான உருவம். சற்று பருத்திருந்தான். முக்கால்வாசி நரைத்துப்போன தலையின் மேல் ஒரு கருநீல வண்ணக் குல்லாய். அவன் போட்டிருந்த பழைய மிலிட் டெரிக் காக்கி உடை குளிருக்கு அத்தனை பாதுகாப்பானதாகத் தெரிய வில்லை. என்றாலும் அவன் அதைப் பொருட்படுத்தின மாதிரித் தோன்றவில்லை.

ரயில் கிளம்பும் அதிர்ச்சியில் என்மீது இலேசாக உராய்ந்து விட்ட தற்காக 'எக்ஸ்க்யூசே மிஸ்யே' என்றான். யாருக்கு வேண்டும் இவன் இங்கிதம்?



படிப்பகம்

www.padippakam.com

"மெத்மொசெல் , மெதாம் எ மெஸ்யே"... அந்தப் பெட்டியில் இருக்கிற அத்தனை பேரையும் உரைக்க அழைத்தான். இந்த அழைப்புக் குப் பதில் , எதேச்சையாக அவன் பக்கம் திரும்பியிருந்த இரண்டொரு வர் கூட வேறு எங்கேயோ பார்க்கத் தொடங்கினர். அவன் எதையும் எதிர்பாராதவன் மாதிரித் தன் பேச்சைத் தொடர்ந்தான்.

மீண்டும் நான்தான் . உங்களில் பலருக்கு நான் பரிச்சயமானவன் தான். உங்கள் பார்வை போகிற போக்கிலேயே நான் அதைப் புரிந்து கொண்டேன். நீங்கள் நினைக்கலாம் , 'ஏன் இந்தக் குட்டைக் கருப்பன் இப்படி அடிக்கடி வந்து உயிரை எடுக்கிறான். இவன் எப்போது ஒழிவான். எப்போது நம் கண்ணிலிருந்து மறைவான்' என்று. உங்கள் கண்ணிலிருந்து என்னை மறைந்து போக வைப்பது மிகவும் சுலபம். இப்போதே இந்த நொடியிலேயே இந்த ரயிலிலுள்ள விளக்கை அணைத்துப் பாருங்கள். இருட்டோடு இருட்டாக நான் மறைந்து போவேன். ஆனால் அப்போதும் அந்த இருட்டிலும் என் புன்னகை பளிச்சென்று தெரியும். ஆமாம், எங்கள் நாட்டிலே சூரியனைப் போலவே பற்களும் பிரகாசமானவை. இதற்காக நீங்கள் பொறாமைப் படத் தேவையில்லை. அதற்கு மாறாக நீங்களும் என்னைப் போல் எப்போதும் சிரித்திருக்கக் கற்றுக் கொள்ளுங்கள். சிரிப்பது என்ன அத்தனைச் சுலபமா? வேலையிலே மன அழுத்தம். வெளியில் வந்தால் மன அழுத்தம். வீட்டுக்குள்ளே மன அழுத்தம். விளையாடுவதற்கோ நேரமில்லை. தொலைக் காட்சிகளோ நம்மை நிரம்பி வழியச் செய்கின் றன. இந்த மன அழுத்தத்திலிருந்து எப்படி வெளியே வருவது ?

இதற்காக டாக்டரிடம் போகிறோம். பணம் கொடுக்கிறோம். மசாஜ் கிளப்புக்கு போகிறோம், பணம் கொடுக்கிறோம். இளைப்பாற்று மையத்துக்கு (Relaxation Centre) போகிறோம். பணம் கொடுக்கிறோம். இப்படிப் பணம் கொடுத்து செலவழிப்பதாலே நம் மன அழுத்தம் மேலும் அதிகமாகிறதே தவிர குறைவதில்லை.
உங்கள் கவலைகளுக்கு ஒரே மருந்து - எளிய மருந்து சிரிப்பது. சிந்தையிலிருந்து சிரிப்பது. வேலைக்காகவும், விற்பனை செய்வதற்காக வும் உங்கள் உதட்டின் மேல் ஒட்டி வைத்திருக்கிற பிளாஸ்டிக் புன்ன கைப்பூவை உள்ளத்தில் இருந்து மலரச் செய்யுங்கள். இதயம் உறைந்து கிடக்கிறதா? கவலை வேண்டாம். என் புன்னகையிலிருந்து உங்கள் புன்னகையைக் கொளுத்திக் கொள்ளுங்கள். நம் வண்ணபேதம் இதற் கும் தடையாகிவிடாது. இதற்காக என்னைத் தேடி நீங்கள் வரவேண்டி யதில்லை. உங்களைத் தேடி நான் வருகிறேன். இதற்கிடையில் , உங்கள் பாக்கெட்டுகளில் அல்லது பர்ஸ்களில் கையை விட்டுப் பாருங் கள். ஓரிரண்டு ' சாந்த்தீம்கள்' தட்டுப்பட்டால் எனக்கு எடுத்து வழங் குங்கள். அதற்கு என் இதயம் திறந்த நன்றியை இப்போதே தெரிவிக்கி றேன். வழங்க மனமில்லை, வாய்ப்பான சிறிய காசு இல்லை... வருத்தப்படாதீர்கள். அதற்காக நான் வழங்கும் புன்னகையைப் புறக்க



படிப்பகம்

www.padippakam.com

ணித்து விடாதீர்கள் . அதில் உங்களுடையதை கொளுத்திக் கொள்ள மறந்துவிடாதீர்கள்.

ஒரு அரைநிமிட அமைதியில் அவன் கையில் ஏந்தி வந்த தொப்பி யில் இங்கொன்றும் அங்கொன்றுமாக சிலிங்... சிலிங் என்று சில்லறை கள் விழுந்தன.

"எல்லாருக்கும் மீண்டும் நன்றி. புன்னகை நிறைந்த இனிய நாளா கட்டும். வருகிறேன். வணக்கம்". வண்டி நின்றது . அவன் இறங்கி னான். நான் இறங்க வேண்டிய 'நாந்த்தேர்' வந்துவிட்டதை உணர்ந்து நானும் இறங்கினேன். அந்த சிலீரென்று வீசிய திறந்த வெளிக்காற்றிலும்

உறைந்து போகாமல் என்னைக் கதகதப்பாக உணர்ந்தேன். அந்தப் புன்னகை மன்னன் அடுத்த பெட்டியில் நுழைந்தான். எனக்கு புரிந்தது. அங்கே அவன் எடுக்கப் போகவில்லை. எல்லாருக்கும் வழங்கப் போகிறான்.

முற்றும்.



படிப்பகம்

www.padippakam.com

# வெள்ளைப் புறா ஒன்று கைையில் வராமலே...

கனடாவிலிருந்து

- ஐயசுதன் -

மனசு குதூகலித்தது !

"யுரேக்கா" எனக் கூவியபடி அது நிர்வாணமாகக் குதித்தோடியது. இளங்காலையில் மொட்டவிழ்ந்த ரோஜா முகம் - அதிலிருந்து திருட்டுத்தனமாக என்னையே ஆலிங்கனம் செய்யத் துருதுருக்கும் , இரண்டு கண்கள் என்ற பொன்வண்டுகள் -பொன்னை உருக்கி உச்சந் தலையில் வழிந்தோட வார்த்தாற் போன்று , பாளம் பாளமாகப் பளபளக்கும் கழுத்தளவோடிய காந்தக் கூந்தல் -இவையாவும் சேர்ந்து என் நிஷ்டையைக் குழப்பிவிட்டன.

"வாழ்நாள் பூராவும் அந்த அழகு தேவதையின் கடைக்கண் கடாஷத்திற்காக , அவளது காலடியில் ஆயுட் கைதியாகவே கட்டுண்டு கிடக்கலாம்".
மனசு அங்கலாய்க்கிறது !

அந்த வெள்ளைக்காரப் பெண்புறாவின் தாபம் ததும்பும் கண்ணெறிகையை எதேச்சையாகக் கண்டுகொண்ட கணம் முதலாக என் இதயம் பீரங்கியாய் . அவளுக்காக அடையாள அணிவகுப்பு மரியாதை வேட்டுக்களை தொடர்ந்தும் தீர்த்துக்கொண்டே இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

"சீ... சீ... , மனசே நீ திருந்தவே மாட்டாயா ?"
மனசின் கீழ்மாடியிலிருந்து யாரோ குறுகுறுப்பது போன்றும் ஓர் அதூசை.
நான் கனடாவில் கரையிறங்கி , ரொறொன்ரோவில் நிரந்தரமாக நங்கூரமிட்டு மூன்று மாதமாகவில்லை. இந்த "ஈட்டன்ஸ் ஷொப்பிங் கொம்பிளெக்சுக்கு" இன்று இரண்டாவது தடவையாக வந்திருக்கின் றேன்.

முதன்முறை என்னை இங்கு கூட்டிவந்து, மாரிகால அட்டைகள் போல, சதா மேலும் கீழுமாக ஊர்ந்துகொண்டிருக்கும் தன்னியங்கள் மாடிப்படிகளில் என்னை ஏற்றி இறக்கி, "கடைகாட்டிப் போன" என் நண்பன் இன்று வரவில்லை.
உலகிலுள்ள அனைத்து ஆடம்பரப் பொருட்களும் இந்த ஈட்டன் ஸினுள் அடக்கம் எனலாம். அந்தளவு பிரம்மாண்டமானது ! கனடிய அரசாங்கம் மாதாந்தம் அளந்து தரும் "வெல்ஃபெயர்" பணத்தில் ஒட்டு ண்ணிச்சீவியம் நடாத்தும் இந்த நாட்களில் நான் ஈட்டன்ஸில "ஷொப் பிங்" செய்ய நினைத்ததற்கும் , சோமாலிப் பையன் ஒருவன் "சொக் லேட்" வாங்கிச் சாப்பிட ஆசைப்பட்டதற்கும் அவ்வளவு பெரிய வித்தி யாசம் இல்லை !

ஏதோ தரங்கூடியதுகளுக்குள் விலை குறைந்தது ஏதாவது தட்டுப் படாதா என்ற அற்ப ஆசையில் துணிமணிகளுக்கு நடுவே சுழியோடிக் கொண்டிருந்த என்னை நோக்கி... மறுபடியும்... மறுபடியும்... அதோ, பெண்கள் பகுதியில் நிரைநிரையாகத் தொங்கிக் கொண்டிருக் கும் ஆடைகளினாலான வேலி இடுக்குகளின் ஊடாக அவள், விழிக ளால் என்னை விசாரித்தபடி !

சொல்லுக்குள் அகப்படாத இன்பசுகத்துடன், நெஞ்சுக்குள் இலே சான படபடப்பு! ஒரே நேரத்தில் என் காதுக்குள் ஓராயிரம் உய்யலாக் கள்!

அருகாக சுவரில் பொருத்தப்பட்டுள்ள ஆளுயர நிலைக்கண்ணாடி யில் தெரியும் என் மாயவிம்பம் ஆய்வுக்குட்படுகிறது.

அகதிகளுக்கே உரிய, அவநம்பிக்கை தோய்ந்த பயப்பிராந்தியையும் மீறி என் முகத்தில் "அறிவு ஜீவித்தனம்" ஏதாவது பளிச்சிடுகின்றதோ ? வாளிப்பான என் உடலின் வாலிப முத்திரைகளில் தன்னைப் பறிகொ டுத்திருப்பாளோ? ஏன் பூர்வஜென்ம பந்தம் கூடக் காரணமாயிருக்கலாம் தானே ?

விருப்பம் துளிர்ப்பதற்கான காரணங்கள் வேடிக்கையானவை. சில வேளைகளில் விநோதமானவையும் கூட.



படிப்பகம்

www.padippakam.com

"முட்டாள்! கண்டதும் காதல் கனடாவிலும் சாத்தியம் என்ற நினைப்போ, உனக்கு ?" மனசுக்கடியிலிருந்து வரும் எச்சரிக்கையா ? அல்லது நையாண்டியா ?

என் வீட்டுக்குள்ளேயே எனக்கு எதிரி, வேறு !
நீலவான் ஆடைக்குள் முகம் புதைத்து நின்று, நிலவென்று அழகு காட்டும் அவளது சுடர்விழிகளின் யாசிப்புக்கு வேறு என்னதான் அர்த்தமோ ?

உடுப்பு தேடும் பாவனையில் இப்போது என் கால்கள் அவளைத் தேடுகின்றன. நான் கிட்ட நெருங்குவதை உணர்ந்து கொண்டதாலோ என்னவோ, அவள் எட்ட எட்ட ஓடி உடை வரிசைகளுக்குள் ஒளிந்து கொள்கிறாள்.

"இந்த நாட்டிலை , ஒராளை இன்னோராளுக்குப் பிடிச்சுக் கொண்டால் நேரடியாகப் பேசி, ஒரு "டேட்டிங்" ஒழுங்கு செய்து, ஒரு "பார்" அல்லது ஒரு "கிளப்" புக்குப் போய் ஆடிப்பாடி வேண்டின மாதிரி அனுபவிச்சுப் போட்டு அடுத்தநாளே விட்டிடலாம் -விருப்பமெண்டால் தொடரலாம். ஊரில வருஷக்கணக்காக, வேர்க்க விறுவிறுக்க சையிக்கிள் சீட்டிலை உழுந்தரைச்சு, அலைஞ்சு திரிஞ்சு, சரக்குச் சுழட்டின மாதிரி இங்கை செய்யத் தேவையில்லை."

நான் இங்கு வந்துசேர்ந்த புதிதில் என்நண்பன் முன்கூட்டியே என் காதில் போட்டு வைத்த புத்திமதி.

இத்தனைக்கும் மாறாக இவளிடத்தில் மட்டும் எப்படி எங்கள் தமிழ்த்தனம் புகுந்துகொண்டதோ ? இங்குமா காவியப் பாங்கில் கண்ணொடு கண்ணோக்கல்? இப்போதுமா? இவளிடத்திலுமா?

வந்த நோக்கம் திசைமாறி, நான் இப்போது அவளைத் தேடுகிறேனா? அடங்கி ஒடுங்கியிருந்த ஓமோன்களைச் சீண்டி வேடிக்கை காட்டுகிறாளா, இந்தச் சிங்காரி?

மழைக்கால மின்னலாய்த் தோன்றி மறைந்தும், மறைந்து தோன்றியும் என்னை அலைக்கழித்துக் கண்ணாமூச்சி விளையாடுகிறாள். ரொம்பவும் பிடிவாதக்காரியாக இருப்பாளோ? பிடிவாதக்காரிகளைத் தான் எனக்கும் வெகுவாகப் பிடிக்குமே !

"ஒன்று மட்டும் நிச்சயம். ஏதோ ஒரு விதத்தில் நான் இவளுக்கு மிகவும் தேவைப்பட்டவனாகிவிட்டேன். நான் இங்கிருந்து வெளியேறும் போது இவள் என்னைப் பின்தொடர்ந்து வருகிறாளா பார்ப்போம்" மனசு தனக்குள் மெதுவாகச் சொல்லியது.



படிப்பகம்

www.padippakam.com

"காஷ் கவுண்டர்" அருகே "பெர்ஃபியூம்" பகுதியில் "சாம்பிள்" ஆக வைக்கப்பட்டிருந்த புட்டியை எடுத்து எனது "ஜாக்கெட்"டுக்கு விசிறிய டித்தேன்.. ரம்யமான "வூடு" வாசனை ! அந்த மயக்கத்தில் மீண்டும் ஒருமுறை அவளைத் தேடிக் கண்கள் சுழல்கின்றன.

அவள் என்னை ஏமாற்றவில்லை. அதோ, சுழல் தாங்கிகளில் தொங்கும் "ஸ்வெட்டர்" களுக்கு நடுவே நின்று என்மீது கடைக்கண் ணால் கணைதொடுக்கிறாள். "பெர்ஃபியூம்" புட்டியைத் தூக்கிக்காட்டி, அவளுக்கு "ஸ்ப்றே" பண்ணுவது போல, சின்னதாய் ஒரு சில்மிஷம்!
தோளில் தொங்கப்போட்டிருந்த "ஹாண்ட்பாக்" கினால் தன் முகத்தை மூடியபடி நாணத்தால் முறுவலித்துப் பின் மீண்டும் மறைந்து கொள்கிறாளோ !

நான் புறப்படத் தயாரானேன்.
எனக்கெனத் தெரிவுசெய்த ஒரேயொரு "ரீஷேட்" டைக் கவுண்டரில் கொடுத்துப் பணம் செலுத்துகிறேன்.
மனசு என்னவோ இன்னமும் அவளைத் தேடி அலைகிறது !

"ஈட்டன்ஸ் பாக்" ஒன்றினுள் ரீஷேட்டையும் "றிஸிட்"டையும் போட்டு மிச்ச சில்லறைகளை என் கையில் திணிக்கும்போது, "ஈட்டன்ஸில் ஷொப்பிங் செய்ததற்கு நன்றி" என்று "காஷியர்" சிட்டு உதிர்த்த வார்த் தைகள் கூட இலேசாகத்தான் காதில் விழுகிறது. ஆர்வமற்ற நன்றிச் சிரிப்புடன் வாசலை நோக்கி அடி எடுத்து வைக்கிறேன்.

என்ன அதிசயம் !
என்னைச் சுற்றிச் சுழன்ற அந்தச் சுந்தரி, எங்கிருந்தோ பறந்து வந்து என் கையைப் பற்றிக் கொண்டாள்.

என் இதயம் ஒரு கணம் தரித்துத் துடித்தது !
ஆவெனத் திறந்தவாறு அணிந்திருந்த என் "ஜாக்கெட்" டின் உட்பு றப் "பொக்கற்" றினுள் சொருகி வைத்திருந்த "வின்ரர் க்ளவுஸ்" சோடியை, அவள் வெளியே உருவி எடுத்து அதை மேலும் கீழுமாகப் புரட்டிப் பார்க்கிறாள்.

"என்ன செய்கிறாய் நீ ?"
இறுகி உறைந்து போன என் முகத்தைப் பார்த்தே, என் கேள் வியை அவள் ஊகித்திருக்க வேண்டும். "ஹாண்ட் பாக்"கிலிருந்து அட்டை ஒன்றை எடுத்து என் முகத்துக்கு நேராகப் பிடித்தாள்.

அவளது அழகான படத்துக்கு அருகாக பெயரும் பதவியும் பொறிக் கப்பட்ட அடையாள அட்டை அது.



படிப்பகம்

www.padippakam.com

"ஈட்டன்ஸின் களவு தடுப்பு அதிகாரி"
எலும்பே விறைத்துப் போகும் இந்த வின்ரர் குளிரிலும் எனக்கு வியர்த்துக் கொட்டியது.

மூன்று மாதமாகப் பாவித்து புதுமெருகை இழந்துபோன எனது "க்ளவுஸை"ப் பார்த்தவுடனேயே அவளுக்குத் தெரிந்து விட்டது, எங்கோ தவறு நடந்துவிட்டதென்று.

"நான் உனக்காக மிகவும் வருந்துகிறேன். ஆனால் ஒன்று, உன்னிடம் நான் இப்படிக் கடுமையாக நடந்து கொண்டதற்கும் உம்மவர்தான் காரணம்"

சற்று நிதானித்து, மன்னிப்புக் கோரும் பாவனையில் சொல்லிய படி, எனது பழைய க்ளவுஸை என் கைகளுக்குள் திணித்துவிட்டு தொடர்ந்தும் தன்வேலையில் ஈடுபடவென, உள்ளே நடந்து கொண்டிருக்கின்றது , எனக்கு வலை விரித்த அந்த வெள்ளைப்புறா !

கூடிநின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அத்தனை பேர் கண்களிலும் ஓர் அற்பஜந்துவாய்க் கூனிக்குறுகிச் சமைந்துபோய் நிற்கிறேன் , நான்!

மனசின் கீழ்மாடியிலிருந்து யாரோ அழுவது தெரிகிறது.

யாருக்காக என்பதுதான் தெரியவில்லை !



படிப்பகம்

www.padippakam.com

# ஏழரை...!

டென்மார்க்கிலிருந்து
- க. ஆதவன் -

இம்முறை பனிக்காலம் சற்று மோசமாகத்தானிருந்தது. எப்படா முடியும் இந்தக்குளிர், என்ற எதிர்பார்ப்பு பறவைகளிடத்தில் கூடக் காணப்பட்டது. அவற்றை வெளியே காணமுடியவில்லை. ஒன்றிரண்டு பறவைகளைக் கண்டாலும் அவை பெரிதாகத் தம்முள் அலுத்துக் கொண்டன. சும்மா கூடக் குசலம் விசாரிக்க முடியாமல் சோம்பலால் இறக்கைகளை நன்றாக மூடிக்கொண்டிருந்தன. மரங்களோ சிலையாகி விட்டன. இலைகளை இப்போது துளிர்ப்பதில்லை என்று கங்கணங் கட்டிக் கொண்டன. மரம் என்று ஒன்று இருந்தால், அதற்கு கொப்பு, கிளை, அடிமரம், இலைகள், துளிர்கள், பிஞ்சு, பூ, சருகு என்று பலவாறான சமாச்சாரங்களை உள்ளடக்கிய.... ஒரு ஆத்மாவாக இருக்க வேண்டாமா?

வெறுமனே ஒன்றும் இல்லாமல்.. ஏனோதானோ என்று... அடிமரத்தின் "மொக்கு" களில் கூட பனி படிந்தபடி... "பொந்து" கள் எல்லாமே அடைபட்டுப்போய், வான்நோக்கி கைகளை நீட்டும் ஒரு மலட்டுப் பிச்சைக்காரன் மாதிரி...
கிளைகளின் நுனியைக் கூட, இழுத்துப்போர்த்தபடி... போர்வை கூட ஏதாவது "கலர்" களில் இருந்திருக்கலாம். எல்லாம் ஒரே வெள்ளை. பின்னால் தெரியும் மேகமும், மேடும், மரநுனியும் எல்



படிப்பகம்

www.padippakam.com

லாமே பனியால் மூடிய வெள்ளை. இது மரம், இது மேடு, இது மேகம் என்று சொல்லமுடியாதபடி வெள்ளை ! பனி! ஐஸ் !

கடற்கரையைக் கேட்கத் தேவையில்லை. "நீலப்பட்டாடை" "நீலச் சேலை" என்பதெல்லாம் பொய். யதார்த்தமாய் நான் 'வெள்ளைச் சேலை" தான் உடுத்திக் கொண்டிருக்கிறேன். என்மீது நீ நடக்கலாம், சறுக்கலாம், நீந்தத் தெரியாமலே என்னைக் கடக்கலாம் என்று கூறிய படி அது மோசமாகவே... ஆம், இம்முறை அந்தக்கடல் உறைந்து போயிற்று.

பனிக்காலம் என்றால் என்ன? கோடை காலம் என்றால் என்ன? எனக்கு எப்பொழுது உலாப்போக வேண்டுமோ... அப்பொழுது நான் உலாப் போதல் வழக்கம். என்னை யாரும் தடுக்கமுடியாது. கடற்கரை உலா, என்பது எனக்குப் பிடித்தமான விடயம்.

"தலைக்கும், தொண்டைக்கும் ஏதாவது கட்டிக்கொண்டு போங்கோ, SUMMER க்குப் போடுற GLOUSE (கையுறை)ஐயே இப்பவும் போடுறியள், WINTER க்கென்று வாங்கின சாமானுகள் அப்பிடியே இருக்கு, போட்டு வந்து இருமிக் கொண்டு அதாலை இரத்தம் வருகுது... மூச்சுவிடக் கஷ்டமாயிருக்குது... என்று சொல்லப்படாது" என்ற என்னவளின் நச்சரிப்பையுந் தாங்கிக் கொண்டு உலா வந்த எனக்கு - இப்பிடி மிக மோசமாய் உறைந்து போன கடலைப் பார்க்க எரிச்சலாய் இருந்தது. எல்லாமே வெறுமையாய் இருந்தது. நான் "சிகரட்" குடிக்கா மலேயே மூச்சுவிடும் பொழுது மூக்கினால் புகை விடுவது போல் ஆவி போனது மேலும் எரிச்சலாய் இருந்தது. "ஸ்கன்டிநேவியா" நாடு என்று வந்தாயிற்று, வடதுருவம் என்றும் சொல்கிறார்கள். இன்னும் இருமணி நேரம் "பிளேனில்" பறந்திருந்தால் 'ICELAND' இல் இறங்கி அகதி வாழ்வை ஆரம்பித்திருப்பேன்.

இங்கே இந்த உறைந்துபோன கடலுடன் 7 1/2 வருஷப் பழக்கம் எனக்கு. 7 1/2 வருஷம் என்றால் கொஞ்சக் காலமல்ல. எதனையும் முழுமையாகப் புரிந்து கொள்ளக் கூடிய அவகாசம். ஆத்மாவை, உடலை, பழையவற்றைப் புரிந்து கொள்ள 7 1/2 x 365 நாட்கள் போதுமானவை.

7 1/2 x 365 x 24 x 60 x60 என எனது கணங்கள் எப்படிக் கழிந் தன எனக் கணக்கிட்டுப் பார்க்கலாம்.

இதனால் தானோ என்னவோ, எனது "அப்பு" (அப்பாவின் அப்பா) சொன்னவர் "7 1/2 ச் சனியனைக் கடக்கிறது கஷ்டம்" என்று.

சும்மா மரங்களையும் - பேச விருப்பமில்லாத பறவைகளையும் - மரத்துப் போன மரமாகிய மலட்டுக் கடலையும் -துணைவியின் தூண்



படிப்பகம்

www.padippakam.com

டுதலால் தொங்கிக் கொண்டிருக்கும் எனது OVER COURT ஐயும் - மனதினுள் திட்டிக் கொண்டு நடந்து கொண்டிருந்தேன். (மூக்கிலிருந்து புகை வந்து கொண்டிருந்தது )

எல்லாமே ஜடமாய்த் தெரியும் இந்த வெள்ளைக் காட்சியினூடே . . . கறுப்புக் "கோர்ட்" அணிந்த அவன் தெரிந்தான்.
"அவன்" என அவனைச் சொல்லக்கூடாது. "அவர்" எனச் சொல் லியிருக்க வேணும் என்பதைப் பின்னர் அறிந்து குட்டிக்கொண்டேன்.

நரைத்த தாடி மயிர் நுனிகளைக்கூட பாழாய்ப் போன "பனி" விட்டு வைக்கவில்லை. அந்த மரத்தின் கீழுள்ள "பெஞ்" சில் -பனி மூடிய அந்த "பெஞ்" ஐ (BENCH) பனிப்பாறை என்று சொல்லலாம். அதில் குறைந்தது 1 1/2 மணிநேரமாவது அவன் இல்லை "அவர்" இருந்திருக்கிறார்.

கண்களின் புருவங்களில் கூட பனித்துளிகள் படர்ந்திருந்தன.
நிமிர்ந்து பார்த்தார் கிழவர். நான் எனது "பொக்கற்" றிலிருந்து ஒரு சிறிய போத்தலை எடுத்து அவரிடம் நீட்டினேன். அந்தப் புட்டியினுள் குளிருக்கு இதமாக இருக்கும் மது இருந்தது.
விறைத்துப் போனதால், நடுங்கியிருக்க வேண்டிய விரல்கள் நடுங் காமலேயே "புட்டி" யை வாங்கின.
"புட்டி" யைத் திறக்க முடியாமல் தத்தளித்து, ஈற்றில் நானே திறந்து கொடுக்க வாயில் ஊற்றிக் கொண்டான்(ர்).

மிகுந்த சிரமப்பட்டுத் தோள்களைக் குலுக்கி நன்றி சொல்ல ஆசைப்பட்டார். "டேனிஷ்" காரர்கள் எப்பொழுதுமே நன்றி சொல்ல மறக்கமாட்டார்கள்.
எனது இந்த "டேனிஷ்" கிழவனாரும் எப்படியாவது அதைத் தெரிவிக்க முயன்றார்.

நான் அவர் அருகே உட்கார்ந்தேன். இந்த உறைகிற பனியில். . . முதிர்கிற வயதில். . . . இங்கே என்ன செய்கிறீர்கள் என்று கேட் டேன்.

"நான் தொலைத்து விட்டேன்" என்றார்.
"எதை?"
"எனது வீட்டை"
"வீடா. . ? அதையும் தொலைப். . "
"உண்மைதான் தம்பி. . . ( எனது "புட்டி" யிலிருந்து சிறிதை அருந்தி விட்டு) நீர் நினைப்பது போல் இது பணக்கார நாடு அல்ல. நான் 70 வயதில் தெருத் தெருவாக அலைகிறேன்.

என்னிடம் இருப்பது ஒரு சின்ன வண்டில். அந்த வண்டிலுக்குள் நான் எனக்குத் தேவையானவற்றை வைத்திருந்தேன். உங்களுடைய



படிப்பகம்

www.padippakam.com

கீழைத்தேய கூட்டுக்குடும்பமுறை வாழ்வு இங்கே வாழமுடியாது. எனக்கென 3 மனைவியரும், 7 பிள்ளைகளும், 16 பேரப்பிள்ளைகளும், 3 பூட்டன்களும் உண்டு. இல்லை. இருந்தார்கள். இருக்கிறார்கள். அவர்கள் தனித்தனியே சென்றுவிட்டார்கள். எங்களுடைய மேலைத் தேய வாழ்வு முறை அப்படியானது. அவரவரைத் தனியாக விட்டுவிடு வது."
ஒரு வகையில் அது நல்லதுதானே" என்றேன் -
வேணுமென்றே "டெனிஷ்" பாஷையில்
உள்ள கொச்சை அர்த்தத்தில்.

நல்லதுதான்,
நானும் அவர்களும்,
அவர் அவர்களும்,
தனியாய், தனித்துவமாய்
இருப்பது நல்லதுதான் ! ஆனபடியாத்தான் நான் எனது உடமை களுடன் தெருவில் இறங்கினேன். எனக்கென ஒரு உலகை என்னுள்ளே சிருஷ்டித்துக்கொண்டு ... நானே பிச்சை எடுத்து..... செல்வம் கொழிக்கும் நாட்டில் பிச்சை எடுத்து வாழ்ந்தேன். வாழ்கிறேன். பணக்கார நாடென்பது வெறும் பணத்தினால் வருவதல்ல.... மனதி னால் வருவது" என்றார்.

"(நானும் 'புட்டி' யில் சிறிதை அருந்திவிட்டு) சரி, நீங்கள் உங்கள் உடமைகளை இழந்துவிட்டீர்கள். அதற்காகச் சில கருத்துகளைச் சொல்கிறீர்கள். உங்களுக்கென நீங்கள் வைத்திருந்த அந்தப் பொருட்க ளைக் கூட அவர்கள்... "

"யார் அபகரித்தார்கள் என்பது இங்கு பிரச்சினை இல்லை. எனது இந்தச் சின்னஞ்சிறிய வண்டிலை, எதற்கு உபயோகப்படுத்தப்போகிறார் கள்? 'அவர்கள்' என்று நீர் சொன்ன அவர்கள், வேண்டாமென்று கழித்து வைத்ததை நான் வைத்திருந்தேன் என்பதுதான் உண்மை"

கிழவர் உண்மையிலேயே தேடுகிறார். இந்த நல்லகிழவர்மார் எப்பொழுதுமே எதையாவது தேடிக்கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு காலநிலை எதுவும் செய்வதில்லை.

பனி என்றால் என்ன?
மழை என்றால் என்ன ?
கோடை என்றால் என்ன?

o o o



படிப்பகம்

www.padippakam.com

"அப்பு. . . .
வேர்க்குது எல்லே! இந்த வெய்யிலுக்கையும் புழுதியிக்கையும் அதைத் தேடத்தான் வேணுமோ. . . " என்றேன்.

"எதைத் தேடுறன் சொல்லு பாப்பம்"
என்றார் கடைக்கண்ணால் என்னைப்பார்த்து விட்டு.

"ஏனப்பு? எந்த நாளும் தேடுறியள்! கிடைக்காது! தேடினால் எதுவும் கிடைக்காது. சும்மா அதைப்பற்றி யோசிக்காமல் வேறை ஏதன் ஒண்டை யோசிச்சுக்கொண்டு நடந்தியள் எண்டால் சும்மா காலடியிலையே வந்து தட்டுப்படும்" என்றேன் எனது மழலையில். . . குருட்டு நம்பிக்கையில்.

அப்பு அந்த வெய்யிலில் எப்போதுமே தேடிக்கொண்டிருந்தார். ஒரு பெரிய கத்தியை ஆரிடமிருந்தோ இரவல் வாங்கிக்கொண்டு வந்தார். நாக்கைக் கடித்தபடி எமது வளவின்முன் பக்கம் அழகாக வளர்த்திருந்த பாவட்டச்செடியை வெட்டினார். கடைக்குப்போட்டு வந்த அம்மா.
"ஏன் உதுகளை வெட்டுறியள் ?" என்று கேட்டா.
"ஒரு வடிவுக்குத்தான்," என்று சொல்லிவிட்டு மீண்டும் வெட்டத் தொடங்கினார்.
வெட்டிக்கொண்டிருந்தவர், அம்மா வீட்டுக்குள் மறைந்ததைக் கண்டதும் பாவட்டம் பாத்தியில் ஏதோ 'தேடத்தொடங்கினார்.
(எனக்கு மீசை முளைத்து விட்டது இப்பொழுது) ஒரு நாள் -அப்புவை நேரேயே மடக்கினேன்.

"தயவு செய்து, சுமார் 7 1/2 வருடங்களாக எதைத்தேடுறியள் எண்டு சொல்லவேணும், இல்லாட்டிப் 'பொலிசிலை' புடிச்சுக்குடுத்திடுவன்" என்றேன்.
அப்பு 'POLICE' என்ற சொல்லைக்கேட்டவுடன் மிரள. . . மிரள. . . என் தங்கையைப் பார்த்துவிட்டு, "பாக்குவெட்டி" என்றார்.

நான் அறிஞ்சநாள் தொட்டு அப்பு பாக்குவெட்டியைத் தேடிக்கொண்டிருந்தார்.

o o o

"உங்களுடைய வண்டிலை எடுத்தவர்கள் அதை உங்களிடம் திருப்பித்தருவார்கள் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா?" என்று கேட்டேன் அந்த நீலக்கண் கிழவரிடம்.
"இல்லை" என்றார்.
"அப்ப ஏன் தேடுறியள்?"
கிழவர் வெள்ளைப்புகையில் பெருமூச்சு விட்டுச்சொன்னார் -
"தம்பி, இந்த வண்டிலை நான் சுமார் 7 1/2 வருடங்களாய் வைத்திருந்தேன். அது தொலைந்து விட்டது. என்னுடன் அது வாழ்க்கை



படிப்பகம்

www.padippakam.com

நடாத்தியிருக்கிறது. ஒவ்வொரு கணமும் நானும் அதுவும் அதனுள்ளே உள்ள பொருள்களுமாய்... வாழ்ந்திருக்கிறோம். நாம் வாழ்ந்த கணங் களை நாம் மறக்க முயன்றாலும் அவை எம்முன் கொழுவிக்கொண்டே 'கொழுக்கி' போல் 'தூண்டில்' போல் இதயத்தினுள் ஏதோ ஒன்று துருத்திக்கொண்டு நிற்பது போல் நிற்கும்.

இந்த நினைவு....
இந்த தூண்டில் ....
இந்தக் கொழுக்கி...

ஆழ்கடலில்.... சமுத்திரத்தில்... தொலைந்து விட்டது.
அது தொலைந்தே விட்டது, என்று எனக்குத் தெரியும். கிடைக்காது என்றும் எனக்குத்தெரியும். எனினும் -அதைத்தேடுவதில் சுகம் இருக்கி றது. அதனுடன் வாழ்ந்த நினைவுகளை -அதனைத்தேடுவதில் மீட்கி றேன்.

ஒரு ஆலாபனை போல -
ஒரு கீர்த்தனை போல -

எத்தனை தரம் நாம் பல்லவியைத் திரும்பத்திரும்பப் பாடுகிறோம்...
சலிக்கவில்லைத்தானே !
அதே போல் தான் இதுவும். அதனை எண்ணுவதில் மகிழ்கிறேன். மகிழ்கையில் எண்ணுகிறேன்" என்றார்.

எனது அப்பு 'பாக்குவெட்டியை'த் தொலைத்து விட்டு 7 1/2 வருஷங் களாய்த் தேடிக்கொண்டிருந்தார்.
இந்த வெள்ளைக்கிழவனுக்கும் அவருக்கும் அதிகளவு தூரம் வித்தி யாசம் இல்லை.
அவரவர்கள் வாழ்வுப்படி அவரவர்கள் தேடிக்கொண்டு தான் இருக்கிறார்கள்.
யாருக்காவது தேடிய பொருள் கிடைத்ததா? கிடைத்தவர்கள் தம்பாட் டில் வெறுமனே இருக்கிறார்களா?
கிடைக்காதவர்கள் தான் ஏதோ கிடைத்து விட்டதாகப் பம்மாத்தும் விளம்பரமும் செய்கிறார்களா?
ஏதோ ஒருவாறு என்னுள் வாதம் வரலாயிற்று.
வீடு வந்தபோது என் மனைவி கேட்டாள் -
"முந்தி ஒருநாள் இப்பிடி 'உலா' ப் போட்டு வரேக்கைதானே உங் கடை 'மோதிரம்' விழுந்தது. அதைத் தேடிப் பாத்திருக்கலாந்தானே!"

'ஓவர்கோட்டை' 'ஸ்ராண்டி'ல் மாட்டிவிட்டு அமைதியாக வந்து சோபாவில் குந்திக்கொண்டேன்.

o o o

எனக்கு 7 1/2 வயதாகும் பொழுது தொடங்கி 15 வயது வரும் பொழுது அப்பு இறந்து போனார். பாக்குவெட்டியை அவர் க்ண்டுபிடிக் கவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

அவரது நினைவுநாளுக்கு- வீட்டுக்கு முன்னால் பந்தல் போடும் பொழுது பாவட்டஞ் செடிகளை முற்றாகவே அகற்ற வேண்டி வந்தது. அப்பொழுது வேர்களுக்கடியில் சாடையாகத் துருப்பிடித்தபடி அந்தப் பாக்குவெட்டியைக் கண்டேன். அதுபற்றி யாரிடமும் பிரஸ்தாபிக்க ஏனோ என்மனம் இடங்கொடுக்கவில்லை. 7 1/2 வருடங்களாய் தேடிக்கொண்டிருந்த அப்புவின் கண்களுக்கு அவர் இருக்கும் காலங்களில் தட்டுப்பட்டிருக்கக்கூடாதா என்ற எரிச்சல் பாக்குவெட்டியின் மேல் வந்தது. ஒருவரிடமும் சொல்லாமல்.... அப்புவை நினைத்தபடி அடிவளவில் இருந்த பாழுங்கிணற்றினுள் அதை விட்டெறிந்தேன்.

o o o

வழமைபோல இன்றும் 'உலா' ப் போக ஆயத்தமானேன். மனைவி வாசலில் வந்து ' குட்பை' என்றாள். அதன் அர்த்தம் மோதிரத்தை மீண்டும் தேடிப்பாருங்கள் என்பதாகவும் இருக்கலாம்.

அதே மரங்கள்... அதே வெள்ளை.. அதே உறைந்துபோன வெள்ளைப் பளிங்குக்கடல்.

அந்தக் கிழவர் இருந்த 'பெஞ்சை' ச் சுற்றிச் சில சனங்கள் நின்று கொண்டிருந்தார்கள். சற்றுத் தள்ளி ஒரு 'ஐம்புலன்ஸ்' வண்டியும் நின்று கொண்டிருந்தது.

நான் கிட்டப் போகவில்லை. வெண்மையான உடையணிந்த 'ஐம்புலன்ஸ்' வண்டிக்காரர் 'ஸ்ரெச்சரில்' ஒரு உருவத்தைக் கிடத்தி 'ஐம்புலன்ஸ்' வண்டியை நோக்கி நடந்துகொண்டிருந்தார்கள்.

'கோர்ட்பை' யிலிருந்த மதுவை அண்ணாந்து பார்த்தபடி அருந்தினேன்.

வீடுநோக்கி நடக்கையில் அந்த மலட்டு மரங்கள்... மேலும் வக்கிரமாய் நிற்பதுபோல்பட்டன.

7 1/2 வருஷமாக நானும் என் நாட்டைத் தொலைத்து விட்டேன்.

7 1/2 வருஷங்கள் 'டேனிஷ்' நாட்டில் வாழ்ந்தால் அந்த நாட்டுப் பிரஜா உரிமை கிடைக்கும்.

பனிக்காற்று பலமாக வீசிக்கொண்டிருந்தது.

மோதிரம் தொலைந்துபோய் 7 1/2 நாட்கள் தானே ஆகின்றன என அவளுக்குச் சொல்ல வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

வெளியீடு : மகாஜனா பழையமாணவர் சங்கம் - பாரிஸ்

படிப்பகம்